22ND JANUARY 2026

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 97 | பக்கங்கள் - 16 | editor.uthayam@gmail.com

# ஜித்தா கவுன்சிலராக லபர் தாஹிர் நியமனம்



சவுதி அரேபியாவின் ஜித்தாவுக்கு இலங்கை கவுன்சிலர் ஜென்ரலாக முஸ்லிம் அல்லாத ஒருவரை நியமிப்பதற்கு வெளிவிவகார அமைச்சு எடுத்திருந்த தீர்மானத்தை இப்போது மாற்றியுள்ளது. முஸ்லிம் அல்லாத ஒருவரை ஜித்தாவுக்கு நியமிக்க முடியாது என்று தேசிய மக்கள் சக்தி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எட்டு பேரும் வெளிவிவகார அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்து ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதிநிதியை ரத்து செய்து தற்போது ஓய்வு பெற்ற மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் லபர் தாஹிர் அவர்களை நியமிக்க தீர்மானித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எட்டு பேரும் அண்மையில்

02ம் பக்கம்பார்க்க...



## சர்வதேச நிறுவன பிரதிநிதிகளுடன் பிரதமர் ஹரிணி தீவிர பேச்சு

பிரதமர் உலகப் பொருளாதார மன்றத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடன் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டார்.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ்-குளோஸ்டர்ஸ் நகரில் ஜனவரி 20ஆம் திகதி நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தின் 56ஆவது வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய, உலகப்

03ம் பக்கம்பார்க்க...

## ரீ.20 உலகக் கிண்ணம்;
### ஜனாதிபதி தலைமையில் காட்சிப்படுத்தும் நிகழ்வு



ICC T20 உலகக்கிண்ணப் போட்டியில் வழங்கப்படும் கோப்பையை, இந்நாட்டில் காட்சிப்படுத்தும் சுற்றுப்பயணம் ஜனாதிபதியின் தலைமையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பம்.

02ம் பக்கம்பார்க்க...

## ஐ.ம.சக்தி,ஐ.தே.க இணைவு சவால் மிக்கது!

**– இவ்வாறு கூறும் திஸ்ஸ அத்தனாயக –**



ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைவது பெரும் சவாலாக மாறியுள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் (20) நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்,

03ம் பக்கம்பார்க்க...

## அரசுக்கு எச்சரிக்கை விடுக்கும் ரணில்



நாட்டின் ஆட்சியாளர்கள் பௌத்த மதத்தைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அன்னியர் ஆட்சிக் காலத்தில்கூட பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள்

03ம் பக்கம்பார்க்க...

## வக்பு சபைக்கு எதிராக றியாஸ் ஸாலி வழக்கு தாக்கல்

கொழும்பு தெவட்டககை பள்ளிவாசலின் பிரதம நம்பிக்கையாளர் றியாஸ் சாலி அவர்களது பதவி நீக்கம் தொடர்பாக வக்பு சபையின் சகல அங்கத்தவர்களுக்கும் எதிராக வழக்கு

02ம் பக்கம்பார்க்க...

## அங்கீகரிக்கப்பட்ட புதிய ஐந்து அரசியல் கட்சிகள்

இலங்கை தேர்தல் ஆணையம் 1981 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7(4) (ஆ) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க 2025 ஆம்

02ம் பக்கம்பார்க்க...

## அமெரிக்க ஐரோப்பிய உறவில் விரிசல்; வர்த்தக ஒப்பந்தம் இடைநிறுத்தம்

அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையில் கடந்த ஜூலை மாதம் எட்டப்பட்ட வர்த்தக உடன்படிக்கையை

03ம் பக்கம்பார்க்க...

## உச்சக்கட்ட வர்த்தக மோதல்; வரலாறு படைத்த தங்க விலை

அமெரிக்கா - ஐரோப்பா இடையிலான வர்த்தகப் போர் பதற்றங்கள்

04ம் பக்கம்பார்க்க...

## ஐ.சி.சீக்கு அடிபணிய மாட்டோம்; பங்களாதேஷ் மீண்டும் அதிரடி!

வங்கதேச விளையாட்டு ஆலோசகர் ஆசிப் நஸ்ருல், சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலை எச்சரித்துள்ளார்.

ரீ20 உலகக் கோப்பை தொடர்பாக இதேபோன்ற அழுத்தம் தங்கள் மீது செலுத்தப்பட்டால், அவர்கள் ஐஊஊ யின் பேச்சைக் கேட்க மாட்டார்கள் என்று அவர் கூறினார்.

இந்தியாவும் இலங்கையும் பிப்ரவரி 7 முதல் மார்ச் 8 வரை ஐசிசி டி20 உலகக் கோப்பை

04ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில் வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/- ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank



## ரீ20...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

2026 ஆம் ஆண்டு இந்தியாவும் இலங்கையும் இணைந்து நடத்தும் ஐஊஊ இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியின் கோப்பையை இந்நாட்டில் காட்சிப்படுத்தும் சுற்றுப்பயணம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு இன்று (21) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

இன்று (21) முதல் 24 வரை நான்கு நாட்களுக்கு நாட்டின் பல பிரதான நகரங்களில் இது காட்சிப்படுத்தப்படுவதோடு, கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச மைதானத்தில் நடைபெறும் இலங்கை-இங்கிலாந்து ஒருநாள் போட்டியின் போது விளையாட்டு ரசிகர்கள் இந்த தங்கக் கோப்பையை அருகில் இருந்து பார்க்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

அதன் பின்னர், கோப்பையை கண்டி, தம்புள்ளை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களுக்கு எடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளதுடன், அங்கு அந்தப் பகுதிகளில் வசிக்கும் விளையாட்டு ரசிகர்கள் உலகக் கோப்பையுடன் நினைவுப் புகைப்படங்களை எடுக்கவும் அதைப் பார்க்கும் வாய்ப்பும் வழங்கப்படும். இந்த நாட்டில் உலகக் கோப்பை போட்டிகள் நடத்தப்படுவதற்கு முன்பு அதற்கான ஆர்வத்தையும் பார்வையாளர்களின் கவனத்தையும் ஈர்ப்பதே இந்த சுற்றுப்பயணத்தின் முக்கிய நோக்கமாகும்.

ஐஊஊ இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளை பெப்ரவரி 07 முதல் மார்ச் 08 வரை இலங்கை மற்றும் இந்தியா இணைந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது

2012 இருபதுக்கு 20 உலகக்கிண்ண போட்டிகளுக்குப் பிறகு இலங்கையில் நடத்தப்படும் மாபெரும் போட்டி, இந்த உலகக்கிண்ணப் போட்டியாகும்.

கிரிக்கெட் உலகக்கிண்ண போட்டிகளுக்கான அட்டவணை 2025 நவம்பர் 25 ஆம் திகதி இந்தியாவில் வெளியிடப்பட்டதுடன், சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் கொழும்பில் உள்ள ஆர். பிரேமதாச மைதானம், பல்லேகலே சர்வதேச மைதானம் மற்றும் கொழும்பில் உள்ள எஸ்.எஸ்.சி. மைதானம் ஆகியவற்றை இலங்கையில் நடத்தப்படும் போட்டிகளுக்கான இடங்களாகத் தேர்ந்தெடுத்தது. அதன்படி, 8 போட்டிகள் ஆர். பிரேமதாச மைதானத்திலும், 5 போட்டிகள் எஸ்.எஸ்.சி. மைதானத்திலும், 7 போட்டிகள் பல்லேகலே சர்வதேச மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

இம்முறை, 20 நாடுகள் போட்டியில் பங்கேற்க உள்ளதுடன், அதில் 20 போட்டிகள் இலங்கையில் நடைபெற உள்ளன. மேலும் பாகிஸ்தான் அணி போட்டியிடவுள்ள அனைத்துப் போட்டிகளும் இலங்கையில் நடைபெறும். அதேபோன்று, பாகிஸ்தான் அணிக்கு அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளில் பங்கேற்க வாய்ப்புக் கிடைத்தால், அந்த இரண்டு போட்டிகளும் இலங்கையில் நடத்தப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு நடந்தால், இறுதிப் போட்டி கொழும்பில் உள்ள ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெறுவதோடு, இதன் மூலம் இலங்கையில் நடைபெறும் மொத்த போட்டிகளின் எண்ணிக்கை 22 ஆக அதிகரிக்கும்.

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் போட்டிகள் நடைபெறுவதோடு, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், பங்களாதேஷ், அயர்லாந்து, ஜிம்பாப்வே மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகளின் கிரிக்கட் அணிகள் இதில் அடங்கும். மேலும், அமெரிக்கா, கனடா, இத்தாலி, நெதர்லாந்து, நெமீபியா, நேபாளம், ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளும் இந்த ஆண்டு போட்டிகளில் பங்கேற்க உள்ளன.

2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கையில் நடைபெறும் இருபதுக்கு 20 உலகக்கிண்ணப் போட்டிகள், நாட்டின் பொருளாதாரம், சுற்றுலாத் துறை, விளையாட்டு மேம்பாடு, சர்வதேச விளம்பரம் மற்றும் நாடு தொடர்பில் சாதகமாக நன்மதிப்பை பெறுவதற்கான ஒரு சிறந்த வாய்ப்பாகக் கருதலாம்.

குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டு அணிகள், ஊடகக் குழுக்கள் மற்றும்



ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் இலங்கைக்கு வருகை தருவதன் மூலம் நாட்டிற்கு அதிக அளவு அந்நியச் செலாவணி வருமானம் கிடைக்கும். மேலும், இதன் ஊடாக ஹோட்டல்கள் மற்றும் உணவு வர்த்தகங்கள், போக்குவரத்து சேவைகள், தொழில்நுட்ப மற்றும் நிர்வாக சேவைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் குறுகிய மற்றும் நீண்ட கால வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் இந்தப் போட்டிகளை நடத்துவதன் மூலம், இலங்கையை ஒரு சுற்றுலாத் தலமாக உலகம் இனங்காண்பதுடன், அதன் ஊடாக புதிய முதலீடுகளை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உருவாகும்.

மேலும், வருடத்தின் ஒவ்வொரு மாதமும் இலங்கையை ஒரு விளையாட்டு சுற்றுலா மையமாக அடையாளம் காணுதல் மற்றும் நாட்டின் சர்வதேச பின்னணியை வலுப்படுத்தி, அதன் மூலம் இலங்கையின் மதிப்பை அதிகரிப்பது போன்ற நீண்டகால நன்மைகளையும் இதன் மூலம் பெற்றுத்தரும்.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் கமகே, விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன, விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ். அச்சுதன், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா உட்பட நிறைவேற்றுக் குழு மற்றும் இலங்கை ரீ20 உலகக்கிண்ண அணியின் தலைவர் தசுன் ஷானக்க, பிரதான பயிற்றுவிப்பாளர் சனத் ஜயசூரிய உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## அங்கீகரிக்கப்பட்ட...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட புதிய அரசியல் கட்சிகளின் பட்டியலை உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளது.

தேர்தல் ஆணையகத்தில் புதிதாக மேலும் 5 கட்சிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

1. சோஷலிச மக்கள் முன்னணி (Socialist Alliance)

2. மக்கள் பங்கேற்பு ஜனநாயக முன்னணி (People's Participatory Democratic Front)

3. மலையக அரசியல் அரங்கம் (Malaiyaga Political Arena)

4. சமத்துவக் கட்சி (Samaththuva Kadchi)

5. புரட்சிகர மக்கள் சக்தி (Revolutionary Peoples Power)

தேர்தல் ஆணையத்தின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க சார்பாக வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவிப்பில் இலங்கையில் இதுவரை தேர்தல் ஆணையத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மொத்த அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 85 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வக்பு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக சிரேஷ்ட சட்டத்தரணி என்.எம்.ஷஹீட் உதயத்துக்கு தெரிவித்தார்.

சில நாட்களுக்கு முன் தெவட்டகக பள்ளிவாசலில் பிரதம நம்பிக்கையாளர் ரியாஸ் சாலி அவர்களை வக்பு சபை பதவிநீக்கம் செய்திருந்தது. பதவி நீக்கம் முறையாக செய்யப்படவில்லை என்றும் இதில் முஸ்லிம் சமயக் குழுக்கள் இடையே கருத்து மோதல்கள் உருவாக இடம் உண்டு என தெரிவித்த சட்டத்தரணி ஷஹீட் பள்ளிவாசலை சிறப்பாக நிர்வாகித்த ரியாஸ் சாலி அவர்களை மீண்டும் நியமிக்க கோரி வக்பு சபையின் சகல அங்கத்தவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்து இருப்பதாக தெரிவித்தார். வக்பு சபையின் பதவிக்காலம் எதிர்வரும் 15 ஆம் திகதி நிறைவடைவதற்கிடையில் தெவட்டகக பள்ளிவாசல் பிரதம நம்பிக்கையாளரை பதவி நீக்கம் செய்துள்ளார்கள்.

## ஜித்தா...


**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அமைச்சரை சந்தித்து இது பற்றி எடுத்து விளக்கிய தையடுத்து இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி மிக விரைவில் நீதியரசர் லபர் தாஹிர் இந்த பதவியை ஏட்க உள்ளார்.

பிரதி மின்சக்தி எரிபொருள் அமைச்சர் அர்கம் இல்லியாஸ் இது குறித்து தமது கட்சி முஸ்லிம் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து அமைச்சரை சந்தித்து விளக்கமளித்த பின் அரசாங்கம் இத் தீர்மானத்தை எடுத்ததாக தெரிவித்தார். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக இருந்த லபர் தாஹிர் அவர்களுக்கு உயர் நீதிமன்றத்தில் வாய்ப்பு அளிக்காததன் காரணமாக அவர் மேல் முறையிட்டு நீதிமன்ற தலைமை பதவியோடு ஓய்வு பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.




## 16 முதல்...




# Mountain View Sports Village

இயற்கை சூழலில் அமைந்த நவீன Indoor விளையாட்டரங்கம் குடும்பத்துடன் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் விளையாட ஏற்ற இடம் ஆண்கள் / பெண்கள் தனித்தனி வசதிகள் & பாதுகாப்பு ஏற்பாடுகள் இளைஞர்கள், யுவ-திகள், சிறார்கள் அனைவருக்கும் ஏற்ற அமைவிடம்

**"விளையாட்டு /ஆரோக்கியம் / மகிழ்ச்சி**

Indoor Games
* Cricket
* Football
* Badminton
* Woolly Ball
* Table Tennis
* Billiards Game
* மேலும் பல Indoor Games

**சிறப்பு அம்சங்கள்**

குளிர்ச்சியான, இயற்கைச் சூழல் அழகிய ரூ சுத்தமான அமைவிடம் நண்பர்கள், குடும்பங்கள், குழுக்கள் அனைவருக்கும் ஏற்றது

**எதிர்கால வளர்ச்சி திட்டங்கள்**

Resort
Swimming Pool



Lake Get-Together Hall...
பாடசாலை ஒன்று கூடல்கள் சிறுவர்களுக்கான வழிகாட்டல் & விளையாட்டு பயிற்சி நிகழ்ச்சிகள் காலத்தின் தேவைக்கேற்ற விளையாட்டு வசதிகள் சிறார்கள் / இளைஞர்கள் / யுவதிகள் ஆரோக்கியமான எதிர்காலத்திற்காக இன்றே வாருங்கள் / அனுபவியுங்கள்!

Mountain View Pvt Ltd
– Sports Village
Pangollamada, Akurana
- 081 75 888 33 / 077 153 755 8
/ 0770 536 673

Mountain View நிறுவனம் பல்வேறு நகரங்கள் மற்றும் பிரதேசங்களில் இத்தகைய நவீன விளையாட்டு வசதிகளை அமைப்பதற்கான வாய்ப்புகள் இருந்தபோதிலும், எங்களது ஊரான அக்குரணை / பங்கொள்ளாமட, மல்கமந்தெனிய கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட நெடிசிறியகம பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்து, அனைத்து வசதிகளும் கொண்ட உள்ளக விளையாட்டரங்கத்தை அமைத்துள்ளமைக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முயற்சி வெறும் வணிக முதலீடாக மட்டுமல்லாமல், எங்கள் சமூகத்தின் மீதான உங்களது நம்பிக்கை, அக்கறை மற்றும் சமூகப் பொறுப்புணர்வின் வெளிப்பாடாகவே நான் கருதுகிறேன். நீண்ட காலமாக போதிய விளையாட்டு வசதிகள் இல்லாமல் தங்களது திறமைகளை வெளிப்படுத்த முடியாமல் இருந்த எங்கள் ஊரின் இளைஞர்களுக்கு, இந்த விளையாட்டரங்கம் ஒரு புதிய நம்பிக்கையையும், சிறந்த எதிர்காலத்தையும் உருவாக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

Mountain View நிறுவனத்தின் இந்த அரிய சேவைக்காக அல்லாஹ்வின் அருளும் ஆசீர்வாதமும் எப்போதும் உங்களுடன் இருக்க வேண்டும் என்பது எனது மனப்பூர்வமான பிரார்த்தனை.

எதிர்காலத்தில் நீங்கள் மேலும் பல சமூக நலத் திட்டங்களை முன்னெடுத்து சிறப்புடன் செயல்பட வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கிறேன்.

அதேபோன்று, எங்கள் ஊரின் இளைஞர்கள் இந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்தி, ஒழுக்கம், அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்புடன் விளையாட்டுத் துறையில் மாவட்ட, மாகாண, தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் பல சாதனைகளை நிலைநாட்ட வேண்டும் என்று நான் பெரிதும் எதிர்பார்க்கிறேன். அவர்களின் வெற்றி எங்கள் சமூகத்திற்கும், அடுத்த தலைமுறைகளுக்கும் சிறந்த முன்மாதிரியாக அமையும்.

மீண்டும் ஒருமுறை, ஆழரவெயடை ஏநைற நிறுவனத்திற்கு எங்களது ஊரின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
ஹமீத் ஏ. காதர்.
தலைவர். சுற்றுச்சூழல் குழு அக்குரனை பிரதேச சபை அளவத்துக்கொட

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டிருந்த பின்னணியில், தற்போதைய ஆட்சியாளர்கள் அப்பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள முடியாது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

காலி பிரதேசத்தில் நடைபெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ரணில் விக்ரமசிங்க இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

"விகாரைகள் மற்றும் தேவாலயங்கள் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கமைய விகாரைகளுக்குச் சொந்தமானவை விகாரைகளுக்கும், தேவாலயங்களுக்குச் சொந்தமானவை தேவாலயங்களுக்கும் உரியனவாகும். நாம் வழங்கும் தங்க நகைகள் அனைத்தும் விகாரைகளுக்கோ அல்லது தேவாலயங்களுக்கோ சொந்தமானவை. அவற்றில் கைவைக்கச் சென்று நாட்டுக்கு என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியாது."

"1815 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் மூன்றாம் ஜோர்ஜ் மன்னர் பௌத்த மதத்தைப் பாதுகாப்பதாகப் பொறுப்பேற்றிருந்தார்."

"இதை ஏற்றுக்கொண்டு மகா சங்கத்தினருடன் இணைந்து இதனைப் பாதுகாப்பது அனைத்துக் கட்சிகளினதும் கடமையாகும்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

## அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கீகரிக்கும் செயற்பாடுகளை ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போது இடைநிறுத்தியுள்ளனர்.

"கிரீன்லாந்து மற்றும் அச்சுறுத்தல்கள் குறித்து தெளிவு கிடைக்கும் வரை நாங்கள் இந்த நடைமுறையைப் பின்பற்றுவோம்" எனஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார மன்றத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடன் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டார்.

இதன்போது, சர்வதேச பங்காளிகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையாளர் ஜோசப் சிகேலாவுடன் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட பிரதமர், இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இடையிலான ஒத்துழைப்பைப் பலப்படுத்தி, இருதரப்புப் பங்களிப்பை முன்னெடுத்துச் செல்வது குறித்துக் கவனம் செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, பிரதமர் உலகப் பொருளாதார மன்ற மாநாட்டு மையத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபைத் தலைவர் மசாடோ கான்டாவை சந்தித்தார்.

இதன்போது இலங்கைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையிலான உறவு மற்றும் எதிர்கால ஒத்துழைப்பைப் பலப்படுத்துவது குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு, மென்சீஸ் விமான சேவை நிறுவனத்தின் தலைவர் ஹசன் எல் ஹூரினுடனான சந்திப்பின்போது, பிரதமர் விமானப் போக்குவரத்துச் சேவைகள் தொடர்பான விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினார்.

உலகப் பொருளாதார மன்றத்தின் கூட்டங்களுக்கு இணையாக டாவோஸ், பிஸ் புய்னில் அமைந்துள்ள நுரசழநெறள ஊ ரடிஇல் நடைபெற்ற உலகளாவிய சுற்றுலா மன்றத்தின் உயர்மட்டக் கலந்துரையாடலிலும் பிரதமர் பங்குபற்றினார்.

பிரதமருடன், தொழில் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்தவும் இக்கலந்துரையாடல்களில் பங்கேற்றார்.


## ஐ.ம. சக்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்காலத்தில் இணைப்பு தொடர்பில் இரு கட்சித் தலைவர்களும் ஒரு முடிவுக்கு வருவார்கள். பொதுமக்கள் எதிர்பார்க்கும் நிலையை அடைய இரு கட்சித் தலைவர்களுக்கும் சிறிது காலம் வழங்கப்பட வேண்டும்.

ஒன்றிணைவதற்கான ஆரம்ப படி கூட்டணி அரசியலாகும். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இடையிலான பிளவு காரணமாக கடந்த 2024 ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள் பாதிக்கப்பட்டன.

எனவே, கட்சி உறுப்பினர்கள் வெற்றி பெற ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுப்பதில் எந்தத் தவறும் இல்லை என்று அவர் கூறினார்.

www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

2026 JANUARY 22 - THURSDAY

WEB: www.uthayam.lk

E-mail: editor.uthayam@gmail.com

FB ID: உதயம்

# கல்விச் சீர்திருத்த பணிகளுக்கு சகலரினதும் ஒத்துழைப்பு தேவை

கல்வி சீர்திருத்தத்தின் ஒரு பகுதியை அமுல்படுத்துவதை ஒரு வருடத்துக்கு ஒத்திப் போடுவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. ஆறாம் வகுப்பு மொடியுல் சம்பந்தமாக நாட்டிலே ஏற்பட்ட எதிர்ப்பு காரணமாக அரசாங்கம் இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

தாமதமானாலும் கல்வி அமைச்சு இத்தீர்மானத்தை எடுத்திருப்பது வரவேற்கக் கூடியது. நாட்டின் கல்விமுறையில் சீர்திருத்தங்களை அமல்படுத்துவது கட்டாயமாக செய்தாக வேண்டும். கல்விச் சீர்திருத்தங்களுக்கு நல்ல சிந்தனை உள்ள எவராலும் எதிர்ப்பு தெரிவிக்க முடியாது. நாட்டின் கல்வி முறை தொடர்பாக பலதரப்பட்ட விமர்சனங்கள் உள்ளன. இந்த விமர்சனங்களை அரசு ஏற்றுக்கொண்டே கல்விச் சீர்திருத்தத்தை அமல்படுத்துவதை தாமதப்படுத்தியுள்ளது.

2027 ஆம் ஆண்டு வரை விரிவான கலந்துரையாடல்களை நடாத்தி தற்போதைய கல்வி சீர்திருத்தத்தில் உள்ள குறைபாடுகளை போக்கி, புதிய கல்வி சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். இதன் காரணமாக கல்விச் சீர்திருத்தத்தை ஒத்திப்போடுவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் அரசுக்கு மூன்றில் இரண்டு பங்கு பிரதிநிதித்துவம் இருந்தாலும் அடிமட்டத்தில் அந்தப் பலம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் யதார்த்தத்தை அரசு உணர்ந்து சகல தரப்பினரினதும் ஆதரவைப் பெற்று கல்விச் சீர்திருத்தம் ஒன்றை தயாரிக்க வேண்டும்.

அரசு கல்விச் சீர்திருத்தத்தை அமுல்படுத்தப்பட்ட முறை குறித்து நாடலாவிய ரீதியில் விமர்சனங்கள் எழுப்பப்பட்டது. ஆறாம் தர மொடியுலில் ஏற்பட்ட தவறு அரசுக்கு கல்விச் சீர்திருத்தத்தை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. மக்கள் கருத்துக்கு மதிப்பளித்து சீர்திருத்தங்களை மீள்பரிசீலனைக்கு எடுத்த முடிவு பாராட்டக்கூடியது. இந்த ஆண்டுக்குள் சீர்திருத்தங்கள் தொடர்பாக விரிவான கலந்துரையாடல்களை நடத்துவது கல்வி அமைச்சின் பொறுப்பாகும். ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றார்கள், மாணவர்கள், கல்விமான்கள், கல்வி அமைப்புக்களின் ஒத்துழைப்பின்றி இவ்வாறான சீர்திருத்தங்களை செயற்படுத்த முடியாது. எனவே சகல தரப்பினர்களினதும் கருத்துக்களைத் திரட்டி, கல்விச் சீர்திருத்தத்தை அமல்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.

## உச்சகட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*காரணமாக, சர்வதேச சந்தையில் (21) தங்கத்தின் விலை ஒரு அவுன்ஸ் 4,800 அமெரிக்க டொலர்கள் என்ற வரலாற்றுச் சாதனை அளவைத் தாண்டியுள்ளது.*

*அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஐரோப்பிய நாடுகள் மீது புதிய வரிகளை விதிக்கப் போவதாக விடுத்துள்ள மிரட்டல், முதலீட்டாளர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.*

*மேலும், அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையே கிரீன்லாந்து விவகாரத்தில் ஏற்பட்டுள்ள மோதல் போக்கு, வர்த்தகப் போர் மேகங்களைச் சூழ்ந்துள்ளதால் தங்கம் விலை அதிகரித்துள்ளது.*

*நேற்றைய வர்த்தக நேரத்தின் இறுதியில் 4,730 டொலர்களாகக் காணப்பட்ட தங்கம் விலை, இன்று ஆசிய வர்த்தக நேரத்தின் தொடக்கத்தில் 4,800 டொலர்களைக் கடந்து புதிய உச்சத்தை எட்டியுள்ளது.*

## ஐ.சீ.சீ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2026 போட்டித் தொடரை நடத்தவுள்ளன.

பாதுகாப்பு கவலைகளை மேற்கோள் காட்டி, வங்கதேசம் ஏற்கனவே தனது போட்டிகளை இந்தியாவில் தவிர்த்து இலங்கையில் விளையாட விரும்புவதாகக் கூறியுள்ளது. இருப்பினும், ஐசிசி இன்னும் இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை.

பங்களாதேஷ் விளையாட மறுத்தால் அவர்களுக்குப் பதிலாக ஸ்கொட்லாந்து தொடருக்கு புதிய வரவாக மாற்றக்கூடும் என்ற ஊகங்களுக்கு மத்தியில் ஆசிப் நஸ்ருலின் அறிக்கை வந்துள்ளது.

ஸ்காட்லாந்து எங்கள் இடத்தில் விளையாடுமா என்பது குறித்து எங்களுக்கு இன்னும் எந்த தகவலும் கிடைக்கவில்லை.

ஐ.சி.சி அழுத்தம் கொடுத்தாலோ அல்லது BCCI க்கு அடிபணிந்தாலோ, நாங்கள் பின்வாங்க மாட்டோம்" என்று நஸ்ருல் கூறினார்.







# ஓரின்ஸ்டோ கல்வி நிறுவனத்தின் வருடாந்த பொதுப் பட்டமளிப்பு விழா




ஓரின்ஸ்டோ கல்வி நிறுவனத்தின் முதலாவது வருடாந்த பொதுப் பட்டமளிப்பு விழா, அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், அதன் பணிப்பாளர் எம். ஆர். எம். ரிஷாத் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக, இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் எம். ஐ. எம். மவ்ஜூத் அவர்கள் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்ததோடு, கௌரவ அதிதிகளாக, மெர்சி லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். ஆர். எம். முனாஸ் நளீமி, மற்றும் ஓரின்ஸ்டோ கல்வி நிறுவனத்தின் கல்வித் துறைத் தலைவரும், வணிகப் பயிற்றுநரும், மேலாண்மை ஆலோசகருமான பேராசிரியர் முஹம்மத் பஹ்மி பாரூக் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்நிகழ்வில், நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் அதிகமானோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.










# நீங்கள் வாசிப்புப் பழக்கம் கொண்டவரா?

அப்படியாயின் நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இருக்காது. ஏனென்றால் உங்கள் வாசிப்பு உங்கள் வாழ்வை ஒழுங்கமைக்கும். உங்கள் வார்த்தைகளை ஒழுங்கமைக்கும். உங்கள் சிந்தனைகளை ஒழுங்கமைக்கும். உங்கள் மொழியையும் ஒழுங்கமைக்கும். உங்களுக்கான சமூக அங்கீகாரத்தையும் விரிவாக்கும். உங்கள் பார்வைகள் விசாலமாகும். விடயப்பரப்புகளில் உங்களுக்கு ஒரு விரிந்த நோக்கு உருவாகும்

ஏனென்றால் இது எம்மை அறியாமல் அல்லது அதனுடைய மகத்துவம் தெரியாமல் நாம் செய்கின்ற முதல் தெய்வீக வணக்கம்.

எனவே அது வழக்கமாக கருதப்பட்டு புனிதமாக செய்யப்படும் பட்சத்தில் அது தரக்கூடிய விளைவுகளும் புதுமையாக தான் இருக்கும்

நாங்கள் வாசிக்கின்ற பொழுது எங்களுடைய வாழ்வு அழகியல் மயப்பட்டதாக ஆன்மீகமயப்பட்டதாக பரந்து விரிந்து தன்மை பெற்றதாக இருக்கும். ஒற்றைப் புள்ளியில் மாத்திரம் பயணித்து நாங்கள் பல்வேறு புள்ளிகளோடு இணைந்து பயணிக்க வேண்டிய ஒரு வலையமைப்பை எமக்குள் உருவாக்கிக் கொள்ள முடியும். எமக்கு பல நண்பர்கள் கிடைப்பார்கள். வாசிப்பு சார்ந்த வகையில் எங்களை நெறிப்படுத்தக்கூடிய வழிப்படுத்தக் கூடிய ஊக்குவிக்க கூடிய பாராட்டக்கூடிய புதிய திசை முகங்களை அறிமுகப்படுத்தக்கூடிய தன்மை பெற்றவர்களாக அவர்கள் இருப்பார்கள்.

உங்கள் வாழ்வில் எதனை நீங்கள் இழந்தாலும் புத்தக வாசிப்பை அதற்கான நேரத்தை ஒருபொழுதும் இழந்து விடாதீர்கள் புத்தகம் வாங்குவதற்கும் புத்தகங்கள் குறித்த விடயங்களை கலந்துரையாடுவதற்கும் முதலிடத்தையே எப்பொழுதும் கொடுங்கள்.

புத்தக வாசிப்பு எப்போதும் வாழ்வை வளமாக்கும். வாழ்வின் போக்கை திசைமாற்றும். வாழ்வுக்கு புது ஒளி பாய்ச்சும்.

வாசிப்பு உங்களுக்கு தனிமையை ஏகாந்தத்தை தவிப்பைத்தராது. அது உங்களை தனித்துவம் வாய்ந்த தன்னாளுமையும் தற்றுணிவும் உள்ளவராக மாற்றும். உங்கள் தற்படிமத்தை உயரத்திக்கொண்டே போகும். உங்களை அறியாமல் உங்கள் அறியாமை விலகும். புதிய தேடல் பரப்பு மொழிக்கட்டமைப்பு போக்கு என உங்கள் புத்திஜீவித்துவ வாழ்வு என வித்தியாசமான வாழ்வொழுங்கொன்றை நோக்கி தளமாற்றம் பெறுவீர்கள்.

இதன் பொழுதெல்லாம் பெருமை பெருமிதம் அகங்காரம் அறிவுச்செருக்கு போன்றவற்றை அகற்றி அப்புறப்படுத்தி தள்ளி வையுங்கள்

நீங்கள் சிறந்த வாசகராயின் சிறந்த வாழ்வொழுங்கொன்றை நிச்சயம் கடைபிடிப்பீர்கள். கண்ணியமாக வாழத்தலைப்படுவீர்கள். வாசிப்பு நிச்சயம் கண்ணியத்தை தரும்.

# நாட்டின் தலைமைப் பதவிக்கு சிறுபான்மை தலைவர்களை பெரும்பான்மை சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்

## - அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெதமுல்ல

**(ஏ.எச்.எம்.ஹாரீஸ் -மத்திய முகாம் செய்தியாளர்)**




தமிழ் பேசும் சிறுபான்மை சமூகம் ஏற்றுக்கொண்டுள்ள ஒரு தலைவராக தற்போதைய ஜனாதிபதி திகழ்கிறார். இதே போன்று சிறுபான்மை சமூகத்திலிருந்து நாட்டின் தலைமைப் பதவிக்கு வரும் தலைவர்களை பெரும்பான்மை சமூகம் ஏற்றுக்கொள்ளும் மன நிலை உருவாக வேண்டும். இது நடக்குமா? என்பதே எனது கனவாகும் என அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெதமுல்ல தெரிவித்தார்.

ஸ்கை தமிழ் ஊடகத்தின் கீழ் இயங்கும் துணிந்தெழு சஞ்சிகையின் 5ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட "துணிந்தெழு சங்கமம்" விசேட விழா கடந்த (17) சனிக்கிழமை கல்முனையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெதமுல்ல ஏ.எஸ்.பி.சி கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்,

பொலிஸ் துறைக்கும், ஊடக துறைக்கும் பாரிய சமூகப் பொறுப்பு இருக்கின்றது. இந்த துறையிலுள்ளவர்கள் இதனை உணர்ந்து செயற்படுவது அவசியமாகும்.

30 வருட யுத்தத்தினால் நாம் பாதிக்கப்பட்டிருக்கின்றோம். இதனால் இனங்களுக்கிடையில் பிரிவினை காணப்பட்டதுடன் நாடு பின்நோக்கி சென்றுள்ளது. எனவே சீரழிந்த நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் இணைந்து இன, மத, பிரதேச வேறுபாடின்றி செயற்பட முன்வர வேண்டும்.


எனது 35 வருட பொலிஸ் சேவையில் ஊடகவியலாளர்கள் பங்கும் உள்ளது. அவர்களிடம் சிநேகபூர்வ உறவை பேணி வருகின்றேன்.

என்னை பொறுத்த வரை ஊடக துறை மூலம் இலாப நோக்கத்தை அடைந்து கொள்ள வேண்டும் என சொற்பட்டால் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். சுயநலத்திற்காவோ இலாபத்திற்காகவோ ஊடகத்துறையை முன்னெடுப்பது பொருத்தமானதல்ல. ஊடகத்திற்கு மட்டும் தான் மக்களை சிந்திக்க வைக்கவும் அவர்களது மனநிலையை மாற்றவும் கூடிய சக்தி காணப்படுகின்றது தற்காலத்தில் எத்தனை தொழில்நுட்பங்கள் வளர்ச்சி அடைந்தாலும் ஒரு புத்தகத்தின் எழுத்திற்கு இருக்கும் சக்தி எதற்கும் இல்லை. ஒவ்வொருவரும் தமது சம்பளத்திலாவது ஒரு புத்தகத்தை வாங்க முன்வர வேண்டும்.

ஊடகவியாளர்களும், எழுத்தாளர்களும் மட்டும் தான் புத்தகங்களை படிக்க வேண்டும் என்றில்லை அனைவரும் புத்தகங்களை படிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# மள்வானையில் தேசிய மிஹ்ராஜ் தினம்






**(ஏ.எஸ்.எம்.ஜாவித், அஷ்ரப் ஏ சமத்)**

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சனிக் கிழமை இரவு (17) இஷா தொழுகையின் பின்னர் தேசிய மிஹ்ராஜ் தினம் மள்வானை ரக்ஷாபான ஜூம்ஆப் பள்ளிவாசலில் முஸ்லிம சமய கலாச்சாரத் பண்பாட்டலுவல்கள் தினைக்களத்தின் பணிப்பாளர் எம். நவாஸ் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வினை பள்ளிவாசல்கள் சம்மேளனமும் இணைந்து ஏற்பாடுகளை செய்திருந்து. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மத விவகார கலாச்சார பிரதியமைச்சர் அஷ்ஷேக் முனீர் முளப்பர் கலந்து கொண்டார்.


இதன்போது ஏனைய பள்ளிவாசல்களின் பிரதிநிதிகள், உலமாக்கள், ஊர் ஜமாத்தின், திணைக்கள அதிகாரிகள் , பிரதியமைச்சரின் அதிகாரிகள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வின் விசேட மிஹ்ராஜ் உரையை அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா சபையின் கொழும்பு மாவட்ட கிளையின் பிரதித் தலைவர் எம்.பி. அப்துல்லா பாயிஸ் (ரஸாதி) வழங்கினார். துஆ பிரார்த்தனையை மல்வானை ரக்ஸபானா ஜ/ம்ஆ பள்ளி வாசலின் இமாம் மௌலவி அனீஸ் வழங்கினார்.

இதன்போது பள்ளிவாசல் தலைவர் பத்தால் மொஹமட் உள்ளிட்ட நம்பிக்கையாளர்களால் பிரதியமைச்சர் மற்றும் திணைக்கள பணிப்பாளர் ஆகியோருக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# தரம் 6 மாணவர்களுக்காக அச்சிடப்பட்ட ஆங்கில மொழி பாடப் புத்தகத்தில் குழந்தைகளுக்குப் பொருத்தமற்ற வலைத்தள தகவல்கள்;

## ஒரு தொழில்நுட்ப விளக்கம்




இந்த வாரம் இலங்கையில் கல்வி சம்பந்தப்பட்ட பேசு பொருளாக இருப்பது புதிய கல்வி சீர்திருத்தங்களின் கீழ் தரம் 6 மாணவர்களுக்காக அச்சிடப்பட்ட ஆங்கில மொழி பாடப் புத்தகத்தில் குழந்தைகளுக்குப் பொருத்தமற்ற வலைத்தள தகவல்களைச் சேர்த்த விடயம்! இது குறித்து அரசாங்கம் மிக விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் என்ன நடந்திருக்கிறது என்ற விடயத்துக்கு வர முன் சில பொதுவான விடயங்களை நாம் சற்று கவனிப்போம்.

முதலாவதாக, நாம் எல்லோரும் அவதிப்படும் ஒரு விடயம் தான், எமக்குத் தேவையான ஒரு தகவலை அல்லது வீடியோவை இணைய தளங்களில் தேடும் போது அல்லது பார்த்துக்கொண்டிருக்கும் போது மாணவர்களுக்கு பொருத்தமற்ற அல்லது அசிங்கமான விளம்பரங்கள், கருத்துக்கள், திடீர் சாளரங்கள், வயதுவந்தோர் உள்ளடக்கம் போன்றன எதிர்பாராத விதமாக தோன்றுவது! அல்லது நாம் அடுத்ததாக என்ன பார்க்க வேண்டும் என்று பொருத்த மற்ற வீடியோவை, வலைப்பக்கத்தை அல்லது உள்ளடக்கமொன்றை எங்களுக்கு பரிந்துரைப்பது..

இரண்டாவதாக, இன்று நல்லதாக இருக்கும் ஒரு இணையத்தளம் நாளை மோசமானதாக மாறக்கூடும். அவர்களது வருமானம், தேவைக்கேற்ப உள்ளடக்கங்கள் மாற்றப்படலாம். இன்று பாதுகாப்பானதாக இருக்கும் பக்கம் நாளை பாதுகாப்பற்றதாக மாறக்கூடும். எனவே வெளி இணையத் தளங்கள் எப்போதும் சரியாகத் தான் இருக்கும் என நம்ப முடியாது. அதே போல் இன்று பிரசித்தி அடைந்துள்ள ஒரு இணைய தளம் நாளை இன்னொரு வருக்கு விற்கப்படலாம். அதனை வாங்கியவர் அதனது உள்ளடக்கங்களை மாற்றக்கூடும். அல்லது அந்த இணைய தளம் முடக்கப்படலாம். இதனை எங்களுக்கோ அரசாங்கத்துக்கோ கட்டுப்படுத்த முடியாது.!

மூன்றாவதாக, கல்வி அமைச்சின் கட்டுப்படுத்தப்பட்ட இணையதளம் பற்றி பார்ப்போம். அதன் பக்க உள்ளடக்கங்கள் கல்வித் தேவைக்கு ஏற்ப நிபுணர்களால் வடிவமைக்கப் பட்டிருக்கும். பக்க உள்ளடக்கங்கள் தேவைக்கும் காலத்திற்கும் ஏற்ப அமைச்சினால் மாற்றப்படலாம். அதே போல் தேவையற்ற, விளம்பரங்கள், வீடியோக்கள், படங்கள், பரிந்துரைப்புக்கள் வருவதற்கான வாய்ப்புக்கள் முற்று முழுதாக மூடப்பட்டிருக்கும். எனவே இது அமைச்சுக்கும், மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பாதுகாப்பானதாக அமைய பெற்றிருக்கும்.

இனி விடயத்துக்கு வருவோம். தரம் 6 மாணவர்களுக்காக அச்சிடப் பட்ட ஆங்கில மொழி பாடத் தொகுதியில் வெளி இணையத்தள முகவரி அச்சிடப்பட்டு இந்த இணைய முகவரி மாணவர்களை, ஆசிரியர்களை வயதுவந்தோர் உள்ளடக்கம் உடைய பக்கமொன்றுக்கு எடுத்துச் சென்றதாவே குற்றம் சாட்டப்படுகிறது. இதுவரை இவ்வாறான ஒரு பக்கம் மாத்திரமே அடையாளம் காணப்பட்டுள்ளது. அதே போல் மிகவும் பழமையான வீடியோக்கள், தகவல்கள் மற்றும் கூகிள் மூலம் மொழி பெயர்க்கப்பட்ட விடயங்கள் இருப்பதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு சேதம் ஏற்கனவே நடந்து முடிந்துள்ள நிலையில் கோடிக் கணக்கில் செலவு செய்யப்பட்டு அச்சிடப்பட்டுள்ள இந்தப் புத்தகங்களை மாற்றவும் முடியாத நிலை!

என்ன தீர்வு? பாடப்புத்தகங்களில் பதிவிடப்பட்டும் ருசுடு, ஞசு ஊழனந போன்ற இணைய இணைப்புகள் தனியார் அல்லது வெளி இணைய தளங்களுக்கு இட்டுச் செல்வதற்குப் பதிலாக கல்வி அமைச்சின் அனுமதி பெற்ற இணையப் பக்கம் மூலம் குழந்தைகளுக்கு பாதுகாப்பான உள்ளடக்கத்துக்கு மட்டுமே செல்ல வேண்டும். இவ்வாறு செய்யப்பட்டால் புத்தகங்களை மீள அச்சிடுவதற்குப் பதிலாக தேவையான இணைய பக்கத்தை அல்லது உள்ளடக்கத்தை மாத்திரம் மறுமுகவரியிடப்பட்டு இலகுவாக மாற்றிக் கொள்ள முடியும். இது மாணவர்களைப் பாதுகாக்கிறது, பெற்றோர் நம்பிக்கையை உருவாக்குகிறது, புத்தகங்களை மீள மீள அச்சடிக்காமல் அரசாங்கப் பணத்தைச் சேமிக்கிறது, டிஜிட்டல் கற்றலைப் பாதுகாப்பாக செயற் படுத்துகிறது, சர்வதேச நடைமுறைகளுடன் பொருந்துகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக, யார் யார் எந்தப் பக்கங்களுக்குள் நுழைந்திருக்கிறார்கள், எந்த உள்ளடக்கங்கள் அதிகமாக பார்க்கப்படுகின்றன போன்ற பகுப்பாய்வுகளை அரசாங்கம் பெற்றுக்கொள்ள இது வழி வகுக்கின்றது.

அது சரி, இவ்வாறான ஒரு சிறு விடயத்தை அமைச்சு எவ்வாறு தவற விட்டது என்பது இந்த வாரத்தின் கேள்வி யாக இருந்து கொண்டிருக்கிறது.

**தொகுப்பு:ஹரீஸ் ஸாலிஹ்**

# புத்துயிர் பெறும் கற்பிட்டி பிரதேச வர்த்தக சங்கம்




**(சியாஜ்)**

கற்பிட்டி பிரதேசத்தில் வர்த்தக சங்கத்தின் செயற்பாடுகளை விரிவு படுத்தும் முகமாக விஷேட கலந்துரையாடல் ஒன்று வெள்ளிக் கிழமை (16) இரவு கற்பிட்டி பஸார் ஜூம்ஆ பள்ளிவாசலில் வர்த்தக சங்கத்தின் தலைவர் எஸ்.ஏ.எம். றியால்தீன் தலைமையில் இடம்பெற்றது.

கற்பிட்டி வர்த்தக சங்கத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்தி சக்திமிக்க சங்கமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்து.


இக் கலந்துரையாடலில் முதற் கட்ட நடவடிக்கையாக கற்பிட்டி நகரில் உள்ள சகல வர்த்தகர்களையும் சங்கத்தில் இணைத்து கொள்வதற்கான முயற்சிகளை முன்னெடுப்பது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. மேலும் அந்த வேலைத்திட்டத்தை ஒரு மாத காலத்திற்குள் நிறைவு செய்து சகல அங்கத்தவர்களையும் ஒன்றிணைத்து கற்பிட்டி பிரதேசத்திற்கான வர்த்தக சம்மேளனம் ஒன்றை உருவாக்குவது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# அசிங்கமான செயலுக்கு அரச அங்கீகாரமா?



## கொதித்தெழுந்த மகாசங்கத்தினர்

## பின்வாங்கியதா அரசு?



எம்.எஸ். அமீர் ஹுசைன்

நாட்டில் கால சூழ்நிலை மாற்றங்களுக்கும் சர்வதேசத்தின் தேவைக்கும் ஏற்ப வளரும் பருவத்தில் உள்ள பிள்ளைகளை சிறந்த முறையில் வளமுடையதாகவும் செயல்திறன் மிக்கதாகவும் தயார்படுத்தும் நோக்கில் அரசாங்கம் முன்வைத்த கல்வி மறுசீரமைப்பிற்கு ஏற்பட்ட கடுமையான எதிர்ப்பு காரணமாக அரசாங்கம் சற்று தயக்கத்துடன் முன் நகர்வை மேற்கொள்ள ஒருபடி கீழ் இறங்க நடவடிக்கை எடுத்தமை பாராட்டத்தக்கதாகும். இது முன்வைத்த காலை பின் வைத்த நிலைமையாகும். ஆறாம் தரத்திற்கான ஆங்கில மொழி கற்பித்தலுக்கான பாடநூலில் அந்த பருவத்திலான (மொடியூலில்) பிள்ளைகளுக்கு பார்ப்பதற்கு பொருத்தமில்லாத இணையத்தள முகவரியை உள் நுழைத்தமைக்கு ஏற்பட்ட எதிர்ப்பு காரணமாக அந்த மொடியுலை நடைமுறையில் கற்பிப்பதை இடைநிறுத்துவதென்றும் 2027 ஆம் ஆண்டு வரை ஒத்திப் போடுவதென்றும் அறிவித்திருக்கின்றது. 2026.01.13 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக 2026.01.15 ஆம் திகதி அரசாங்கம் அறிவித்தது. ஏற்கனவே எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் கல்வி மறுசீரமைப்பை அமுல்படுத்தியே தீருவோம் என்று பகிரங்கமாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நாட்டு மக்களுக்கு அறிவித்திருந்த நிலையில் தான் இந்த பின்வாங்கல் இடம்பெற்றிருக்கின்றது. ஏன் இவ்வாறு ஆறாம் தரத்திற்கான பாடநூலை மாத்திரம் பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது? இனி என்ன நடக்கவிருக்கின்றது. இது வரையில் இந்த பாடநூல் அமுலாக்கம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்கு யார் பொறுப்பு என்ற பல கேள்விகள் எழுகின்றன. அத்துடன் பதவி துறந்த தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் பதவியை மீண்டும் அரசாங்கம் வழங்கி முன்னைய பணிப்பாளரையே அதே பதவியில் அமர்த்துமா என்றெல்லாம் வினாக்கள் எழுவதோடு அவற்றிற்கு விடைகாண்பதும் சிரமமாகவே இருக்கின்றது. எவ்வாறாயினும் 2026.01.08 ஆம் திகதி கண்டி அஸ்கிரிய, மல்வத்தை பீடாதிபதிகளை சந்தித்த பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரினி அமரசூரிய பாடநூல் விடயத்தில் பிழை நடந்திருக்கின்றது. நாங்கள் தவறை ஏற்றுக் கொள்கின்றோம். தவறுகளை திருத்திக்கொண்டு முன்னே செல்வோம் என்று நம்பிக்கை தெரிவித்திருந்தார். அதன்படி தேசிய கல்வி நிறுவனத்தின் அனுமதியுடன் ஆறாம் தர ஆங்கில பாட மொடியுலில் இடம்பெற்றிருந்த சர்ச்சைக்குரிய பாடத்தை மாத்திரம் வாபஸ் பெற்று பாடநூலில் இருந்து அந்தப் பக்கங்களை மாத்திரம் கிழித்து அப்புறப்படுத்திவிட்டு நிலைமையை சமாளிக்கலாம் என்று ஹரினி எதிர்பார்த்திருந்தார்.

ஆனாலும் 2026.01.15 ஆம் திகதி முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச பத்தரமுல்லை, இசுரு பாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் முன்னால் சத்தியாக்கிரகம் ஒன்றை ஆரம்பித்து அங்கு முகாமிட்டு இந்த கல்வி மறுசீரமைப்புக்கு எதிர்ப்பை வெளிப்படுத்த ஆரம்பித்தார். இதற்கிடையில் மகாசங்கமும் பிரதமரிடம் உங்களுக்கு தேவையாக இருந்தால் நீங்கள் எந்த நிலைப்பாட்டிலும் இருக்கலாம். ஆனாலும் தேவை இல்லாத விடயங்களை கல்வி மறுசீரமைப்பு என்ற பெயரில் இளம் சந்ததியினரை தவறான வழிக்கு செலுத்தி நாட்டில் 2500 வருடங்களுக்கு மேலாக கட்டிக்காத்து வருகின்ற சிங்கள பௌத்த கலாசார பாரம்பரியங்களை சீர்குலைக்க வேண்டாம் என்று ஆறாம் தர ஆங்கில பாடநூல் தொடர்பாக கடுமையான அதிருப்தியை வெளியிட்டனர். கிறிஸ்தவ திருச்சபை பேராயர் மெல்கம் ரஞ்சித் அவர்களும் அரசாங்கத்தின் இந்த போக்கை கடுமையாக கண்டித்திருந்தார். இத்தகைய நிலைமைகள் அரசாங்கத்தின் எங்கோ ஒரு மூலையில் தாக்கத்தை ஏற்படுத்தியதால் ஆறாம் தரத்திற்கான ஆங்கில பாட கல்வி மறுசீரமைப்பை வாபஸ் பெற்றதோடு 2027 ஆம் ஆண்டு வரை அதனை அமுல்படுத்துவதை ஒத்திப்போடுவதாக அறிவித்தது. அதே நேரம் தரம் 01 இற்கு அறிமுகம் செய்யவுள்ள கல்வி சீர்திருத்தங்கள் 2026.01.29 ஆம் திகதி முதல் அமுலுக்கு வர இருக்கின்றது என்ற விடயத்தையும் உறுதி செய்திருக்கின்றது. ஆனாலும் ஆறாம் தரத்திற்கு கடந்த ஆண்டு பயன்படுத்திய அதே பாடநூல்களை பயன்படுத்தி கற்பித்தல் நடவடிக்கைகளை தொடருமாறும் கடந்த வருடம் பயன்படுத்திய பாடநூல்களை மாணவர்களிடம் இருந்து மீளப்பெற்று புதிதாக 06 ம் தரத்திற்கு வரும் மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தல்களை வழங்கி இருக்கின்றது. அத்துடன் பல புதிய தீர்மானங்களையும் எடுப்பதற்கு இந்த ஆறாம் தர மொடியுலுக்கான எதிர்ப்பு அரசாங்கத்தை தூண்டி இருக்கின்றது. பிரதானமாக உத்தேசிக்கப் பட்டுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான எண்ணக்கரு பத்திரம் (கொன்செப்ட் பேபர்) கலைத்திட்ட சட்டகம் (கரிகியுலம் பிரேம் வர்க்) மற்றும் அனைத்து தொகுதிகளுக்குமான பாடநூல்கள் (மொடியுல்ஸ்) என்பவற்றை விரிவானதொரு பொதுக் கலந்துரையாடலுக்கு பொதுமக்களுக்கு வெளியிடப்படும் என்ற அறிவித்தலை கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ செய்தி அறிக்கையொன்றின் மூலம் அறிவித்திருக்கின்றார். என்னவானாலும் அரசாங்கம் முன்வைத்த காலை பின்னால் எடுத்ததானது அரசின் நடவடிக்கைக்கு குறிப்பிடத்தக்க பின்னடைவை ஏற்படுத்தி இருக்கின்றது. பாராளுமன்றத்தில் 159 ஆசன பலத்தைக் கொண்டிருந்தாலும் இனிமேல் நாட்டு மக்கள் விரும்பாத நாட்டின் எதிர்கால நலனை பாதிக்கும் எந்த விடயத்தையும் பாராளுமன்ற பெரும்பான்மை பலத்தை பயன்படுத்தி மேற்கொள்ள முடியாது. அதற்கு மக்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டார்கள் என்பதை சரியான முறையில் புரிந்துகொள்ள கிடைத்த சிறந்த தருணம் இதுவாகும். ஏற்கனவே தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெற்றுள்ள ஓரினச் சேர்க்கைக்கு உரிய இடமும் அந்தஸ்தும் வழங்கி அதனோடு சம்பந்தப்பட்ட தரப்பினரின் உரிமைகளை பாதுகாத்து நிலை நிறுத்துவோம் என்ற அடிப்படையிலே இந்த பாடநூலுக்குள் மறைமுகமாக அதனை புகுத்த எடுத்த முயற்சி கருதப்படுகின்றது. அத்துடன் பிரதமர் ஹரினி அமரசூரியவும் இந்த விடயத்தில் ஆர்வம் காட்டக்கூடியவர் என்ற குற்றச்சாட்டு எல்லாத் தரப்பினர் மத்தியில் இருந்தும் முன்வைக்கப் பட்டிருக்கின்றது.

அதனால் இந்த விடயத்தில் இரகசியம் அல்லது அரசு மறைப்பதற்கு எதுவும் இல்லை. சுமார் 04 இலட்சம் மொடியுல்கள் அச்சிடப்பட்ட நிலையில் அதற்காக 06 கோடி ரூபா அரச நிதி வீண் விரயம் செய்யப்பட்டிருக் கின்றது. ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்காவுக்கு எதிராக அரச நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டது என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதே போன்று கடந்த வாரம் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமாக இருந்த விமல் வீரவன்ச மீதும் அரச நிதி துஷ்பிரயோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட இருக்கின்றது. அவ்வாறே ஏற்கனவே முன்னாள் சுகாதார அமைச்சராக இருந்த கெஹெலிய ரம்புக்வெல்ல மீதும் இதே குற்றச்சாட்டின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் ஜோன்ஷ்டன் பெர்னாண்டோ மீதும் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறாயின் இந்த மொடியுல் அச்சிடுவதற்காக செலவான 06 கோடி ரூபா இழப்பும் ஒருவகையில் அரச நிதி துஷ்பிரயோகம் என்றே கூறலாம். அதே நேரம் அரசாங்கம் ஆறாம் தரத்திற்கான கல்வி மறுசீரமைப்பை 2027 வரை பிற்போடுவதாக அறிவித்தாலும் கொழும்பை தளமாகக் கொண்டு இயங்கும் ஓரினச் சேர்க்கைக்கு ஆதரவான மகளிர் அமைப்புக்கள் ஹரினிக்கு ஆதரவு தெரிவித்து மீண்டும் ஆறாம் தரத்திற்கான அதே பாடநூலை நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும், ஓரினச் சேர்க்கை பிரச்சினைக்குரியதல்ல என்றேல்லாம் கூறி மீண்டும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் செய்தியாளர் மாநாடுகளை நடாத்தியும் வருகின்றனர். கடந்த 2016.01.15 ஆம் திகதி வீரவன்ச, கல்வி அமைச்சின் முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடாத்தி சத்தியாக்கிரகம் செய்த போது அதற்கு எதிராக இரண்டு முஸ்லிம் தரப்புக்களும் ஊர்வலம் சென்று ஓரினச் சேர்க்கை வேண்டும் என்று ஆதரவை வெளிப்படுத்தி இருக்கின்றனர். அத்துடன் மனித உரிமைகள் அமைப்பு என்ற பெயரில் முஸ்லிம் பெண்மணி ஒருவரையும் உள்ளடக்கிய தரப்பு இந்த ஓரினச் சேர்க்கைக்கு எதிரான நடவடிக்கைகளை நிறுத்துமாறு கோரி ஹரினிக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முறைப்பாடுகளை செய்துள்ளனர். இஸ்லாம் முற்றாக வெறுத்து ஒதுக்கக் கூடிய கண்டிக்கத்தக்க விபச்சாரத் தொழில் மற்றும் செக்ஸ் வியாபாரம், அதனோடிணைந்த ஓரினச் சேர்க்கையை எவ்வாறு இந்த முஸ்லிம் தரப்பு ஆதரிக்க முடியும்? அஸ்கிரிய, மல்வத்தை, அமரபுர நிகாய, ராமஞ்ஞ நிகாய, கிறிஸ்தவ திருச்சபை என்று அனைத்து தரப்பும் கண்டிக்கும் அசிங்கமான இந்த செயலை எவ்வாறு தாடி வைத்து தொப்பி ஜிப்பா அணிந்து, பர்தா, அபாயா அணிந்து இஸ்லாமிய சூரத்துடன் எவ்வாறு நடைமுறைப்படுத்து என்று ஊர்வலம் போவது? அல்லது ஹரினியின் கல்வித்திட்டத்தில் அடங்கியுள்ள இந்த பாடத்திட்டத்தை ஆதரிப்பது? அதனால் எம் சமூகம் பின்னால் போவது எதற்காக என்பதை சரியான முறையில் அறிந்து சமூகத்தின் கௌரவம், இஸ்லாமிய மத, கலாசார, பண்பாடு. விழுமியங்களை மதித்து அவற்றுக்கு கேடு விளைவிக்காமல் நடந்துகொள்ள வேண்டிய தார்மீக பொறுப்பு இருக்கின்றது.

இந்நிலையில் அரசாங்கம் பாடநூல் தயாரிப்பதில் இருந்து அச்சிடுவதற்கான ஏற்பாடுகளை செய்த அதிகாரிகளை மாத்திரம் குற்றம் சுமத்தி அவர்களது தலையில் பிரச்சினையை போட்டுவிட்டு தப்பிக்கொள்ள முடியாது. மொத்தமான பொறுப்பு கல்வி அமைச்சரான ஹரினி அமரசூரிய மீது இருக்கின்றது. அத்துடன் அவருக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை ஒன்றும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றது. அதனால் வெறுமனே பாடநூலை வாபஸ் பெற்று கல்வி மறுசீரமைப்பை 2027 ஆம் ஆண்டு வரையில் பின்போட்டு மறுசீரமைப்பை செய்து அடுத்த வருடம் மீண்டும் அமுல்படுத்தி னால் நிலைமை சரியாகி விடுமா? நாட்டிற்கு கல்வி புகட்ட வேண்டிய இளம் தலைமுறையினரை சரியாக வழிநடத்த தேவையான வழிகாட்டுதலை செய்ய வேண்டிய பொறுப்பு வாய்ந்த கல்வி அமைச்சர் இதனோடு பிரச்சினையை மூடி மறைக்க முற்படக் கூடாது. ஜனாதிபதி கடந்த 70 வருட கால சாபம் என்று கூறி வருவது போன்று இந்த அரசு குறித்தும் எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை எதிர்க்கட்சியின் சேறு பூசும் அரசியல் என்று மக்களை தவறான திசைக்கு வழிநடத்தாமல் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

எஸ்.ஏ.சுஃப்யான்
(senior Journalist,
Chennai -
Tamilnadu, India)

# அச்சுறுத்தும் ஈரான்

# பின்வாங்கினாரா டிரம்ப்?





ஈரான் உள்நாட்டில் நடைபெறும் போராட்டத்தில் அமெரிக்கா நேரடியாக மூக்கை நுழைத்து எங்கள் உள்நாட்டு பிரச்சினைகளில் தலையீடு செய்து வருவதை நாம் ஒரு போதும் ஏற்று கொள்ள மாட்டோம் என்று ஈரான் தெளிவாக தெரியப்படுத்தி உள்ளது.

ஈரான் நாட்டில் சமீபத்திய நாட்களில் பொருளாதார வளர்ச்சி மற்றும் பிரச்சினைகளை தீர்த்து வைக்க வேண்டும் என்று அந்த நாட்டின் செய்யது அலி கொய்மேனி ஆட்சியை அகற்றும் வகையில் மிகவும் கடுமையான போராட்டம் எழுச்சி பெற்றுள்ள நிலையில் ஈரான் இதனைத் ஒடுக்கும் வகையில் எடுக்கப்பட்ட ஆயுத தாக்குதல் மூலம் பல்லாயிரக் கணக்கான கலவரக்காரர்கள் கொல்லப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் அனைவரும் ஈரான் நாட்டில் ஜனநாயகம் தழைக்க வேண்டும் என்று அடிப்படையில் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் போராடி வருவதாக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரண்டு நாடுகளும் பேசி வரும் நிலையில் இந்த போராட்டத்தை தூண்டும் வகையில் அமெரிக்கா மற்றும் அதன் சர்வதேச புலனாய்வு அமைப்புக்கள் தீவிரத் தன்மையுடன் செயல்பட்டு வருவதை நாம் காணும் வகையில் அமைந்துள்ளது.

அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகள் அனைத்தும் ஈரான் நாட்டின் எல்லை மீறிய இராணுவ பலம் தமக்கு வரும் காலங்களில் மிகப் பெரிய அளவிலான பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்று உளவியல் ரீதியாக அச்சம் தெரிவித்து வருகின்ற நிலையில் தான் இது போன்ற தீவிர ஈரான் எதிர்ப்பு இயக்கத்தை மொசாத் மற்றும் அமெரிக்கா உளவு அமைப்பான சி ஐ ஏ போன்றவைகள் ஒன்றிணைந்து ஏராளமான ஆயுதங்களை, போராட்டம் செய்பவர்களை ஒருங்கிணைப்பு செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக ஈரான் மத்திய அரசு தலைமை வெளிப்படையாக குற்றம் சாட்டியுள்ளனர் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

இந்த குற்றவாளிகள் பலரை ஈரான் அரசு கண்டுபிடித்து கொத்து கொத்தாக கொலை செய்து வரும் நிலையில் அவர்களிடம் இருந்து ஏராளமான தொழில்நுட்ப சக்தி வாய்ந்த ஆயுதங்களை ஈரானின் ஐ ஆர் ஜி சி சிறப்பு ராணுவ படை வீரர்கள் கைப்பற்றி வருவதாக ஈரான் அரசு தொலைக்காட்சி செய்திகளை வெளியிட்டு வருகிறது.

அமெரிக்கா தாக்கினால் பதிலடி கொடுப்போம் என்று இரான் எச்சரித்துள்ளது. இதற்கிடையில், தீவிரமடைந்து வரும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் நூற்றுக்கணக்கான போராட்டக் காரர்கள் கொல்லப்பட்டிருப்பதாக பிபிசி வட்டாரங்களும் ஆர்வலர்களும் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் அமெரிக்காவின் இந்த முயற்சிக்கு முட்டுக்கட்டை போடும் வகையில் வளைகுடா நாடுகள் அடுத்தடுத்து முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறது. இன்று மாலை வெளியான முக்கிய அறிவிப்பில் ஈரான் நாட்டை தாக்க நினைத்தால் அமெரிக்க விமானங்களுக்கு சவுதி வான்பரப்பு, ராணுவ தளங்களை பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்று சவுதி அரேபியா தெளிவாகவும், திட்டவட்டமாகவும் தெரிவித்துள்ளது.

இதை சவுதி அரேபியா அரசு தரப்பில் அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் தனது நிலைப்பாட்டை அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது மத்திய கிழக்கில் புதிய பதற்றத்தை உருவாக்கியுள்ளது. சவுதி தலைமையிலான வளைகுடா நாடுகள்சவுதி அரேபியா தலைமையில் தற்போது கத்தார் மற்றும் ஓமான் இணைந்து அமெரிக்க ஈரான் மீது ராணுவ தாக்குதல் நடத்த கூடாது என்று வலியுறுத்தி வருகின்றன.வால் ஸ்ட்ரீட் ஜர்னல் ஜனவரி 13 அன்று வெளியிட்ட தகவலின்படி, வளைகுடா நாடுகள் டிரம்ப் நிர்வாகத்திடம் தாக்குதல் திட்டங்களை கைவிடுமாறு அறிவுறுத்தியுள்ளது. டிரம்ப் நேற்று வெளியிட்டுள்ள சமூக வலைத்தள பதிவில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஈரானியர்களை தொடர்ந்து போராடுமாறு வலியுறுத்தியுள்ளார். உங்களுக்கான “உதவி வருகிறது” என்று பதிவிட்டு உள்ளார்.

இதற்கு மத்தியில் தான் வளைகுடா நாடுகள் டிரம்ப் நிர்வாகத்தை ஈரானில் தாக்குதல் நடத்த கூடாது என அடுத்தடுத்து கோரிக்கையை விடுத்து வருகின்றன. ஈரான் மக்கள் போராட்டம் குறித்து வளைகுடா நாடுகள் தொடர்ந்து அமைதி காத்து வந்த நிலையிலும், அமெரிக்கா இந்த போராத்திற்கு சப்போர்ட் செய்து வருகின்றன. ஆனால் அமெரிக்காவின் தலையீடு மூலம் ஈரான் நாட்டில் ஆட்சி மாற்றம் நடந்தால் கச்சா எண்ணெய் சந்தையை கடுமையாக பாதிக்கும் என்று வளைகுடா நாடுகள் அஞ்சுகின்றன. இது அமெரிக்க பொருளாதாரத்துக்கும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று வளைகுடா அதிகாரிகள் அமெரிக்க அரசுக்கு தெரிவித்துள்ளனர். முக்கியமாக, இந்த தாக்குதல் வளைகுடா பிராந்தியத்தில் எதிர்பாராத விளைவுகள் ஏற்படும் அச்சம் வளைகுடா நாடுகளுக்கு உள்ளது.

கத்தாரின் அச்சமும் எச்சரிக்கையும் கத்தார் அரசு அமெரிக்கா-ஈரான் இடையே ராணுவ மோதல் ஏற்பட்டால் வளைகுடா பிராந்தியத்துக்கு பேரழிவு ஏற்படும் என்று செவ்வாய்க்கிழமை எச்சரித்துள்ளது.

இந்த நிலையில் கத்தார் தலைநகர் தோகாவில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கத்தார் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர Majed al-Ansari கூறுகையில், “எந்தவொரு போர் தாக்குதல் நடந்தாலும் அது இப்பிராந்திய த்தை தாண்டி பெரிய அளவிலான பேரழிவு சர்வதேச அளவில் ஏற்படுத்தும். அதை முடிந்தவரை தவிர்க்க விரும்புகிறோம்” என கூறினார்.இந்த நிலையில் புதன்கிழமை வெளியான தகவலின்படி, கத்தாரில் உள்ள al-Udeid விமான தளத்தில் உள்ள அமெரிக்க ராணுவ ஊழியர்கள் இன்று மாலைக்குள் வெளியேற அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ரஷ்யாவின் எச்சரிக்கை வளைகுடா நாடுகளை போல் ரஷ்யாவும் அமெரிக்காவுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஈரான் மீதான அமெரிக்காவின் இராணுவ தாக்குதல் அச்சுறுத்தல்களை “முற்றிலும் ஏற்க முடியாதவை” என்று ரஷ்யா கடுமையாக கண்டித்துள்ளது. ஈரான் அரசியலில் அமெரிக்காவின் தலையீடு “அழிவு ஏற்படுத்தும் முயற்சி” என்று ரஷ்யா விமர்சித்துள்ளது. ரஷ்ய வெளியுறவு அமைச்சக அறிக்கையில், அமெரிக்கா மத்திய கிழக்கில் ஏற்படுத்தும் ஆபத்தான செயல்களுக்கு கட்டாயம் பின்விளைவுகள் இருக்கும் என்பதை உணர வேண்டும் என்று எச்சரித்துள்ளது. இந்த எச்சரிக்கைகள் உலக எண்ணெய் சந்தை மற்றும் பொருளாதார வளர்ச்சி குறித்த கவலைகளை எழுப்பியுள்ளது.

சவுதி அரேபியா தலைமையிலான வளைகுடா நாடுகளின் நிலைப்பாடு அமெரிக்காவின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே ஈரான் தலைநகர் தெஹ்ரானில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் திங்கட்கிழமை முதல் மெல்ல மெல்ல குறைந்து வருவதாக தகவல் வெளியாகி வருகிறது.

ஒருபக்கம் அரசுக்கு எதிரான போராட்டங்கள் பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்திய நிலையில், கடந்த வார இறுதியில் இருந்து அரசு ஆதரவு பெற்ற பேரணிகளில் லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்றதால் போராட்டங்களின் தீவிரம் குறைந்துள்ளது. ஜனவரி 15, 2026 நிலவரப்படி, ஈரான் அரசு போராட்டங்களை கட்டுப்படுத்தும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளது. பல ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர். போராட்டத்தை கட்டுப்படுத்து வதில் ராணுவமும் இறங்கியுள்ளது. இதேபோல் அமெரிக்காவின் தாக்குதல் முடிவுக்கு சவுதி தலைமையில் வளைகுடா நாடுகளும், ரஷ்யாவும் இணைந்து பெரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. மேலும் கத்தார் அரசு அந்நாட்டின் விமானத் தளத்தில் இருந்து அமெரிக்க ராணுவத்தை வெளியேற அறிவித்துள்ளது, சவுதி தனது வான்பரப்பை அமெரிக்க ராணுவம் பயன்படுத்த கூடாது என அறிவித்தது போன்ற முக்கியமான விஷயங்களால் ஈரான் நாட்டின் மக்கள் போராட்டம் குறைய துவங்கியுள்ளது.

ஈரான் அரசு இன்று சுமார் ஐந்து மணி நேரம் வான்வெளியை மூடியது. அமெரிக்க இராணுவ நடவடிக்கை அச்சம் காரணமாக இந்த மூடல் அமுல்படுத்தப்பட்டது. இதனால் ஈரான் நாட்டில் விமான போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது. தற்போது போராட்டம் கட்டுக்குள் வந்துள்ளது. அமெரிக்காவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஆகியவற்றின் மூலம் வான்வெளி மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

ஈரானில் இன்டர்நெட் தடை, போராட்டம் குறையும் ஏழாவது நாளாக இன்றும் தொடர்கிறது. போராட்டங்களை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் அரசு இந்த இன்டர்நெட் முடக்கத்தை அமுல்படுத்தியுள்ளது. இதனால் மக்கள் மத்தியில் தகவல் பரிமாற்றம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.மேலும் ஈரான் நாட்டில் இன்டர்நெட் சேவையை கொண்டு வருவதற்காக ஸ்டார்லிங்க் நிறுவனம் ஈரானில் இலவச சாட்டிலைட் இன்டர்நெட் சேவையை வழங்குவதாக அறிவித்துள்ளது.

பிரான்ஸ் அரசு Eutelsat சாட்டிலைட் டெர்மினல்களை அனுப்பும் வழிகளை ஆராய்ந்து வருகிறது.

மேலும் ஈரான் போராட்டக்காரர்கள் மத்தியில் பெரும் எழுச்சியை ஏற்படுத்திய எர்ஃபான் சோல்டானி விவகாரத்தில் திடீர் திருப்பம் ஏற்பட்டு உள்ளது. சனிக்கிழமை கைது செய்யப்பட்ட 26 வயது இளைஞர் எர்ஃபான் சோல்டானி-க்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதாக வெளியான அறிக்கைகளை ஈரான் நீதித்துறை மறுத்துள்ளது. இதை ஈரான் நீதித்துறை இந்த மறுப்பை அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது.

போராட்டம் குறைய இதுவும் முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது.அமெரிக்க அதிபர் டிரம்பின் கருத்து அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், ஈரான் எதிர்க்கட்சி தலைவரான ரெசா பஹ்லவி (ஈரானின் கடைசி ஷாவின் மூத்த மகன்) குறித்து முக்கியமான கருத்தை தெரிவித்துள்ளார். தற்போதைய ஈரான் அரசு அமைப்பு சரிந்தால் ரெசா பஹ்லவிக்கு உள்நாட்டில் போதிய ஆதரவு இருக்குமா என்பது சந்தேகம் என்று தெரிவித்துள்ளார். இது ஈரான் ஆட்சி மாற்ற சாத்தியங்களை குறைத்துள்ளது. அதேபோல் அமெரிக்க அரசின் தாக்குதல் முடிவையும் தள்ளிவைக்கும் வகையில் அமைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அதாவது ஐ நா-வின் பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் இன்று ஈரான் நிலைமை குறித்து விவாதிக்கப்பட்ட உள்ளது. உலக அளவில் ஈரான் போராட்டங்கள் குறித்து பீதி அதிகரித்துள்ள வேளையில் இந்த கூட்டம் சர்வதேச அளவிலான நடவடிக்கைகளை தீர்மானிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# முஸ்லிம் சமூக எழுச்சியில்

## கலாநிதி டி.பி.ஜாயா (1890 -1960)

### அல் அஸ்லாப் நினைவுப் பேருரைகள்

**தொடர் ...04**

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அறிஞர் எம்.சி.சித்திலெப்பையும்,அவர் தம் தோழர்களும் ஏற்றி வைத்த முஸ்லிம்களின் கல்விச் சுடரை அணையாது காத்து,அடுத்த தலைமுறையின ருக்கும் ஒளிபெறச் செய்தவர்களிடையே ரி.பி. ஜாயா(1890 -1960), சேர்.ராசிக் பரீட் (1893 -1984),கலாநிதி.பத்யுத்தீன் மஹ்மூத் (1904 - 1997),ஏ.எம்.ஏ.அஸீஸ் (1911-1973).எம்.டி.அக்பர் ஆகியோர் குறிப்பிட்டுக் கூறக் கூடியவர்களாக விளங்குகிறார்கள்.இவர்கள் 20 ஆம் நூற்றாண்டில் முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றங்களுக்கும் அயராது உழைத்தார்கள் என்பதற்கு இன்று முஸ்லிம் சமூகம் கல்வியில் அடைந்துள்ள முன்னேற்றங்களே சான்றுகளாய் விளங்குகின்றன.

அந்த வகையில் இருபதாம் நூற்றாண்டின் தலைவர்களில் கல்விமான்களில் ஒருவராகத் திகழ்ந்த கலாநிதி துவான் புர்ஹானுத்தீன் ஜாயா அவர்கள் மலாயர் குடும்பம் ஒன்றில் கண்டி மாவட்டத்தில் கலகெதர எனும் கிராமத்தில் ஆங்கிலேய ஆட்சியில் பொலீஸ் சார்ஜனாக கடமையாற்றிய காசிம் ஜாயாவுக்கும் தாய் நோனா ஜாயா(நீசுர்ஜா) ஆகிய பெற்றோருக்கு 1890 ஜனவரி முதலாம் திகதி பிறந்தார்கள். மூத்த சகோதரன் துவான் ஆரிபீன்,இளைய சகோதரன் துவான் பாரிஸ்,சகோதரி தேவி என நால்வரில் ஜாயா இரண்டாமவராகப் பிறந்தார்கள்.

முறையாக அடிப்படைக் கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் முடித்துக் கொண்ட இளம் ஜாயா 1910 ஆம் ஆண்டிலேயே ஆசிரியர் தொழிலை பெற்றார்.கண்டி தர்மராஜ கல்லூரியில் தன் பணியைத் தொடங்கிய அதே ஆண்டிலேயே மொரட்டுவை பிரிண்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியில் மேலைத்தேய இலக்கிய ஆசிரியராக நியமனம் பெற்றார். அவ்வருடத்திலேயே லண்டன் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகளுக்கும் தயாராகினார்.1913 ஆம் ஆண்டில் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்து 1916 ஆம் ஆண்டு கலைப் பட்டதாரியாகினார். இலத்தீன்,கிரேக்க வரலாறு என்பனவற்றில் தேர்ச்சி பெற்றிருந்த ஜாயா 1917 இல் கொழும்பு ஆனந்தா கல்லூரியில் ஆசிரியராகச் சென்றார். 1921 வரை ஆனந்தா கல்லூரியில் பணிபுரிந்த ஆசிரியச் சேவையின் மேன்மை பற்றி அவரோடு சக ஆசிரியராக கடமையாற்றிய பேராசிரியர் ஜி.பி.மலலசேகர இவ்வாறு குறிப்பிடுகிறார்.

“கல்லூரியினது ஆசிரியர் குழாத்தின் தலைவர் போன்று ஜாயா விளங்கினார். ஆசிரியர்களும் மாணவர்களும் அவரை மிகவும் நேசித்து மரியாதைச் செலுத்தினர்.மிகவும் பிரபல்யமான விரிவுரையாளராக அவர் விளங்கினார்.பிரித்தானிய,ஐரோப்பிய வரலாறுகளின் வளங்களையும் கிரேக்க உரோம இலக்கியச் செல்வங்களையும் நன்கு அறிந்து அவற்றிற் புலமை பெற்றிருந்ததால்,ஜாயாவின் வகுப்புக்களை மாணவர்கள் தவற விடுவதில்லை. ஏனெனில்,விடய ஞானமும், அவற்றை விளங்க வைக்கும் ஆற்றலும் மிகவும் கவர்ச்சியுடைய வையாயிருந்தன.ஆயினும் அவரது முஸ்லிம் சமுதாய அழைப்பு வந்ததும் அவ்வழைப்பை யேற்று,ஸாஹிராவின் அதிபர் பொறுப்பை ஏற்றார்.”1

மேலும் ஆனந்தா கல்லூரியில் ஜாயாவின் ஆசிரியச் சேவையின் பெரும்பலனை குறிப்பிடுவதாயின், இலங்கை தாய்த் திருநாட்டின் முன்னோடி அரசியல் தலைவர்களாக மூதறிஞர்களாக வரலாற்றில் போற்றப்படும் கலாநிதி என்.எம்.பெரேரா,பிலிப் குணவர்தன. ரொபர்ட் குணவர்தன,எஸ்.ஏ.விக்ரமசிங்க ஆகியோர் ஜாயாவிடம் கற்றுத் தேர்ந்த மாணவர்களே என்பதாகும்.இம்மாணவர்களுள் பிலிப் குணவர்தன படிப்பில் கெட்டிக்கார மாணவராக ,ருந்த போதும் வாக்கு வாதங்களை முன்வைப்பதிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சிந்தனைகளிலும் ஈர்க்கப்பட்டு அடிக்கடி ஆசிரியர்களுடன் முரண்படுபவராக இருந்தார். இதனால் அப்போதைய ஆனந்தா கல்லூரி அதிபர் பி.டி.எஸ் குலரத்ன அம்மாணவனை பாடசாலையை விட்டு ,டைநிறுத்த தீர்மானித்தார். இதனை தடுத்து அம்மாணவனுக்கு இன்னொரு வாய்ப்பு வழங்குமாறும் தான் அவரை கவனிப்பதாகவும் கூறியதோடு மீண்டும் ஏதேனும் பிரச்சினைபடுமிடத்து அம்மாணவனை பாடசாலையிலிருந்து விலக்குவதோடு தானும் கற்பிப்பதைவிட்டு வேறு வேலைக்குச் செல்வதாகவும் ஜாயா வாக்களித்த சம்பவமும், அதே மாணவனான பிலிப் குணவர்தன பின்னாளில் அமெரிக்க பல்கலைக்கழகத்தில் கல்வியை முடித்து “ ஐயா நீங்கள் இல்லா விட்டால் நான் இந்த நிலைக்கு வந்திருக்க முடியாது” என்றும் நன்றிக் கடிதம் எழுதியமையும் இனமத பேதமின்றிய அவரது உண்மையான ஆசிரியத்தவத்தின் புனிதத்தையே தெளிவுறுத்து கின்றது.பிலிப் குணவர்தன அவர்களின் மகனே தினேஷ் குணவர்தன முன்னால் பிரதமர் (2022- 2024)2 என்பதும் முக்கிய விடயமாகும்.

இவ்வாறு ஆனந்தாவில் கற்பித்துக் கொண்டிருந்த காலத்திலேயே சட்டத்துறை மாணவனாகவும் தன்னை பதிவு செய்திருந்த ஜாயாவுக்கு, 1921-09-01 ,ல் முஸ்லிம்களின் முன்னோடி கல்விக் கூடமான கொழும்பு ஸாஹிராவின் அதிபர் பொறுப்பை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பல்துறை அறிஞராக விளங்கிய இவர் சமூகத்தின் விடிவு கல்வியின் விடிவே என்பதை அறிந்து கல்விக்காகவே தன்னை அர்ப்பணிக்கத் தொடங்கினார். ஆனால் அவர் பொறுப்பேற்ற அதிபர் பணி அவருக்கு முட்கிரீடமாவே அமைந்திருந்ததை அவரது வார்த்தைகளே எடுத்துக் காட்டுகின்றன.

“பாடசாலையின் தோற்றம் மிக மோசமாக இருந்தது. 6 ஆசிரியர்களும் 59 மாணவர்களுமே இருந்தனர்.தளபாடம் எதுவும் இருக்கவில்லை. கனிஷ்ட பாடசாலை ஒன்றுக்கு போதுமான கட்டிடம் ஒன்றே காணப்பட்டது.இக்கட்டிடம் இரவு நேரங்களில் நடைபாதை வாசிகளாலும் ஏனைய விரும்பத்தகாதவர்களாலும் உபயோகிக்கப்பட்டது. சுற்றுப்புறம் எத்தகைய கவர்ச்சியுமற்றதாக இருந்தது.பாடசாலையைச் சுற்றி பற்றைக் காடுகள் மண்டிக் கிடந்தன.”3

இவ்வாறு சீர்கேடுற்றிருந்த ஸாஹிராக் கல்லூரி ஜாயா அதிபராகப் பதவியேற்று சிறிது காலத்துக்குள்ளேயே ஆனந்தா ரோயல் கல்லூ ரிகளுக்கு சமனானதாக வளர்ந்தது. ஜாயா பதவியேற்ற அடுத்த வருடமே மாணவர் தொகையிலும் ஆசிரியர் தொகையிலும் பெரும் முன்னேற்றம் கண்டது.1922 இல் மாணவர் தொகை 150 ஆகவும் ஆசிரியர் எண்ணிக்கை 30 ஆகவும் அதிகரித்தது. விஞ்ஞானக் கூடம், விளையாட்டு மைதானம் என வளர்ச்சியுற்று, கல்லூரிக்கான பிரதான மண்டபத்தை 1928 இல் அப்போதைய ஆளுநராகவிருந்த சேர்.ஹேர்பட் ஸ்டேன்லி மூலம் ஜாயா திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. பல புதிய பாடங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன.விளையாட்டிலும் மாணவர்கள் படிப்படியாக ஆர்வமுற ரக்பி, கிரிகெட், உதைபந்து, குத்துச் சண்டை என சாஹிராவின் நாமத்தை ஜாயா ஒளிரச் செய்தமை 1932 ஆம் ஆண்டு முதன் முறையாக டிரினிற்றிக் கல்லூயை ரக்பியில் வெற்றி கொண்ட ஸாஹிரா மாணவர்கள் ஐந்து வருடங்களின் பின்னர் குத்துச் சண்டையில் ஸ்டப்ஸ் கேடயத்தையும் கைப்பற்றி யமை வரலாற்றுச் சான்றுகளாகும்.ஸாஹிராவின் வளர்ச்சியால் இலங்கை எங்கிலுமிருந்து மாணவர்கள் ஸாஹிராவை நாடி வந்தனர். நன்றாகக் கற்கக் கூடிய மாணவர்களுக்கு ஸாஹிராவில் சகல வசதிகளையும் செய்து கொடுத்தது போல் வசதி குறைந்தோர் வயது கூடியோர் தொழில் புரிவோர் என்பவருக்கெல்லாம் ஸாஹிரா கல்லூரியிலேயே இரவு நேர பாடசாலையையும் ஆரம்பித்தமை முஸ்லிம் சமூகத்தை முன்னேற்றுவதில் அவர் கொண்டிருந்த அக்கறையையே தெளிவு படுத்துகின்றது.இத்தகைய சமூக பற்றுடைய ஜாயாவினதும்அவரால் முன்னேற்றம் அடைந்த ஸ ாஹிராவினதும் பங்களிப்பினை பற்றி இலங்கை பல்கலைக்கழக முதலாவது உபவேந்தர் சேர் ஐவர் ஜென்னிங்ஸ் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

“1927 ஆம் வருடத்தில் இலங்கைப் பல்கலைக் கழக கல்லூரியில் கற்ற 315 மொத்த மாணவர்களுள் மூன்று பேர் மட்டுமே முஸ்லிம்களாய் இருந்தனர்.1924 இல் இலங்கைப் பல்கலைக்கழகம் உருவானபோது மொத்தம் 904 மாணவர்களுள் 25 பேர் முஸ்லிம்களாயும் 1946 இல் 132 மாணவர்களுள் 37 பேர் முஸ்லிம்களாயும் இருந்தனர். 1927 இலிருந்து 1946 வரை மொத்த மாணவரின் எண்ணிக்கை 185 சதவீதம் அதிகரித்துள்ளது. முஸ்லிம் மாணவரின் எண்ணிக்கையோ 80 சதவீதம் அதிகரித்துள்ளது.விகிதாசாரப்படி எண்ணிக்கை மிகச் சிறியது.ஆனால் கல்வித் துறையில் பெருந்தொகை ஒன்றை அதிகரிப்பதை விட சிறிய தொகை உன்றை அதிகரிப்பதே கஷ்டமாகும்.ஏனெனில் ஒரு பரம்பரையே தனது வாரிசுகளை உற்பத்தி செய்தல் வேண்டும்.எனவே கடந்த 25 வருட காலத்தில் முஸ்லிம் கல்வி முன்னேற்றத்திற்கு எடுக்கப்படும் முயற்சிகளை எண்ணிக்கைகள் காட்டுகின்றன. இம்முயற்சிகளுள் ஸாஹிரா கல்லூரியினதும் ஜாயாவினதும் பங்கு தலையாயதாகும்.”4

இவ்வாறு சான்றோர் புகழும் வண்ணம் ஜாயாவால் வளர்ச்சியுற்ற கொழும்பு ஸாஹிராவின் இயக்கம் 1942 ஆம் ஆண்டு உலக மகா யுத்தத்தால் ஸ்தம்பிதமடைந்தது. இதனால் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து கொழும்பில் வந்து கல்வி கற்ற பல மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாமல் பெரும் சிரமங்களை எதிர் நோக்கினர். இச்சிரமம் ஸாஹிராவின் கிளைகள் நாடெங்கிலும் ஆரம்பிக்கப்பட காரணமாய் அமைந்தது.

“இதற்கமைய 1942 இல் அழுத்கமையிலும், கம்பளையிலும் 1944 ,ல் மாத்தளையிலும் 1945 இல் புத்தளத்திலும் என ஜாயா பல கிளைப் பாடசாலைகளை ஆரம்பித்தார்.”5

இவற்றிடையே கம்பளையில் தொடங்கப்பட்ட ஸாஹிராவுக்கு ஜாயா அவர்கள் இலங்கையின் கல்வி முன்னோடிகளில் ஒருவரும் அவரது மாணவருமான பத்யுத்தீன் மஹ்மூத் அவர்களை முதல் அதிபராக நியமித்தமையும் அதனால் பாடசாலை அடைந்த வளர்ச்சியும் மறக்க முடியாததாகும்.யுத்த காலத்தில் புதிய பாடசாலை கள் எதுவும் அமைக்கப்படக் கூடாது என்ற சட்டத்தை கொழும்பு ஸாஹிராவின் கிளைகள் என்ற பெயரில் பல பாடசாலைகளை ஜாயா ஆரம்பித்தமை அவரது புத்தி சாதுரியத்தையும் பின் தங்கிய நிலையிலிருந்த முஸ்லிம்கள் இனியும் கல்வியில் தாமதம் காட்டக் கூடாது என்ற அவரது சமூக கரிசனையையும் எடுத்துக் காட்டுகின்றது.

1921 முதல் 1948 வரை கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் அதிபராக இருந்து ஜாயாவினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இன்று வரை பயன் தந்து கொண்டிருப்பது அவரது சேவையின் உயர்வுக்கு சாட்சிகளாகும். தனது 27 வருட தியாகத்தை தொடர்ந்தும் அணையாது பாதுகாக்க தனக்குப் பின் அதிபர் பொறுப்பை ஏ.எம்.ஏ.அஸீஸிடம் கையளித்தமையும் தன்னை முழுநேர அரசியல் சேவகனாக மாற்றிக் கொண்டமையும் சமுதாயம் பற்றிய அவரது தூர நோக்கத்தையே காட்டுகின்றது. “1948 இல் அவர் கொழும்பு ஸாஹிராவை விட்டுச் செல்லும்போது 3500 மாணவர்களையும் 150 ஆசிரியர்களையும் நாடெங்கிலும் பத்து கிளைப் பாடசாலைகளையும்” 6 கொண்ட பிரபல பாடசாலையாக வளர்ச்சி கண்டிருந்தமை முஸ்லிம் சமுதாயத்தின் எழுச்சி கல்வியே என்பதை அறிந்து தன் வாழ்நாளை அர்ப்பணித்த ஜாயாவின் பெரும் பங்கினையே எடுத்துக் காட்டுகின்றது.ஆனந்தா கல்லூரியில் இந்நாட்டின் பிரபல சிங்களத் தலைவர்களை உருவாக்கியது போலவே தனது ஸாஹிரா கல்லூரியிலும் புகழ் பெற்ற சமூகத் தலைவர்களையும் உருவாக்க காரணமாகினார்.

இதனை ஜனாதிபதி ஆலோசகரும்,முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் அல்ஹாஜ் அஸ்வர் அவர்கள் 31.05.2009 ஞாயிறு ஒப்சொவர் பத்திரிகை கட்டுரையொன்றில் ஜாயாவின் மாணவர்கள் பெயர்களை இவ்வாறு பதிவு செய்திருந்தார்.”முன்னால் சபாநாயகர் பாக்கிர் மாக்கார்,முன்னாள் அமைச்சர்களான கலாநிதி பத்யுத்தீன் மஹ்மூத்,எம்.எல்.எம்.அபுசாலி,நைனா மரிக்கார், நீதிபதிகளான அப்துல் காதர், ஏ.எம்.அமீன்,எம்ஏ.எம்ஹுஸைன், முன்னால் சட்டமா அதிபர் ஏ.சீ.எம்.அமீர் பரிஸ்டர்.ஏ.எல். எம்.ஹாஷிம் (சவூதிக்கான இலங்கைத் தூதுவராக கடமையாற்றியவர்)”7

கல்வி வளர்ச்சிக்காக பாடுபட்டுக் கொண்டே ஜாயா அரசியலூடாகவும் நாட்டுக்கும் தன் சமூகத்திற்கும் சேவையாற்றிய பெருமகனாகத் திகழ்கின்றார். 1924 தொடக்கம் 1931 வரை இலங்கை சட்ட நிருபண சபை அங்கத்தவராகவும் 1936 தொடக்கம் 1947 வரை இலங்கை சட்டசபை அங்கத்தவராகவும் செயலாற்றி 1947 தொடக்கம் 1958 வரை இலங்கையின் முதலாவது அமைச்சரவையில் தொழில் சமூக சேவைகள் அமைச்சர் என உயர்வடைந்தார். அவ்வரசியல் செல்வாக்கின் ஊடாகவும் கல்வி முன்னேற்றத்தையே கருத்திற் கொண்டிருந்தார் என்பதை அவரது காலத்தில் கல்வியில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

1936 இலிருந்து 1947 வரை அரச சபையின் கல்விக் குழுவின் அங்கத்தவராயிருந்த ஜாயா தேசிய தலைவர்களோடு ஒன்றிணைந்து இலவசக் கல்விக்காக குரல் கொடுத்தார்.இதனால் தான் இலவசக் கல்வியின் தந்தை என போற்றப்படும் சீ.டபிள்யு.டபிள்யு கன்னங்கர அவர்கள் “ஜாயா ஒரு கல்விமான் தியாகி எங்களுடன் சேர்ந்து இலவச கல்விக்காக உழைத்தவர்”8 என பாராட்டினார். இவரது காலத்திலேயே ராசிக் பரீத் அவர்களும் கல்விக் குழுவில் உறுப்பினராக இருந்தார். இதனால் ஜாயாவின் பணிகள் மேலும் வலுவடைந்தன. ஜாயா கல்விக் குழுவின் அங்கத்தவராக இருந்து மேற்கொண்ட பணிகள் பற்றி அறிஞர் ஏ.எம்.ஏ அஸீஸ் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

“இலங்கையின் முஸ்லிம் பிரதேசங்களிலே அநேக சுயமொழிப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. இவற்றிலே கற்பிப்பதற்கு போதிய முஸ்லிம் ஆசிரியர் இல்லாத குறை இருந்தது. முஸ்லிம் ஆசிரியர்களுக்கு என விசேட ஆசிரியர் கலாசாலைகளை தாபித்ததன் மூலம் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டது.அரபு கலாசாலை களையும் அவற்றின் தராதர பத்திரங்களையும் கல்வித் திணைக்களம் அங்கீகரிக்குமாறு இக்கல்விக் குழு சிபாரிசு செய்தது.இதன் மூலம் மௌலவிகள் அரசினர் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு அரசாங்கமே வேதனம் வழங்குவதற்கான வழி பிறந்தது. பாடசாலையிலேயே மாணவருக்கு அவர்களது சமயத்தை போதிப்பதற்கான உற்சாகம் அளிக்கப்பட்டது.,தன் விளைவாகவே ஒவ்வொரு மாணவனுக்கும் அவனது பெற்றோரின் சமயத்தை கற்பித்தல் பாடசாலையின் பாடத் திட்டத்தில் ஒரு பகுதியாகவே இடம்பெறல் வேண்டுமென 1939 ஆம் ஆண்டின் 26 ஆம் விளக்க கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பகுதி அமைந்தது. இதன் மூலம் மக்தப் எனப்படும் குர்ஆன் பாடசாலைக்கும் தற்கால அரசாங்க பாடசாலைக்குமிடையே இணைப்பு பாலம் ஒன்று உருவாகியது.கடந்த நூற்றாண்டின் விசேட முஸ்லிம் பாடசாலைகளின் மறுபிறப்பு இதுவெனக் கொள்ளலாம்.இலங்கை முஸ்லிம்களிடையே கல்வி விழிப்புணர்ச்சி ஏற்பட இது உதவியதோடு எல்லா பிரதேச முஸ்லிம்களின் ஒத்துழைப்பை பெறுவதற்கும் இது உதவியது.”9

இந்த அளவுக்கு முஸ்லிம்களின் கல்வியை முன்னேற்றிய ஜாயா அன்று முற்றாக புறக்கணிக்கப்பட்டிருந்த முஸ்லிம் பெண்களின் கல்வி பற்றி குரல் எழுப்பவும் செயற்படவும் பின்னிற்கவில்லை.என்பதும் ஒரு முக்கிய அம்சமாகும். பெண் கல்வி பற்றி இலங்கை முஸ்லிம் சங்கத்தின் பேசும் போது இவ்வாறு வினா எழுப்பினார்.

“கல்வியிலிருந்து பெறுதற்கரிய உயர் நலன்களையும் கலாசார மறுமலர்ச்சியையும் எமது தாய்மாறுக்கும் மனைவிமாருக்கும் மறுக்க வேண்டுமா? இவ்வாறானவற்றை வழங்குமாறு வலியுறும் ஒரு சமயத்தை சேர்ந்தவர் நாம்.தனது வரலாற்றின் உச்ச கட்டத்தில் இருந்த காலத்திலேயே பெண் தலைவிகளையும் சீர்திருத்தவாதிகளையும் உலகுக்களித்த இனத்தைச் சேர்ந்தவர் நாம்.”10 என்று குறிப்பிட்டார். இது பேச்சளவில் நின்று விடாமல் 1921 தொடக்கம் 1948 வரையான காலத்தில் ஸாஹிராவின் அதிபராக இருந்து கொண்டே கொழும்பு ஹைரியா முஸ்லிம் பெண்கள் பாடசாலையை ஆரம்பிப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் பேருதவி புரிந்தார்.எம்.சி.அப்துர்ரஹ்மான், சித்திலெப்பை என்போரால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட பெண் கல்வியை வளர்ச்சிப் படிகளில் ஏற்றுவதில் ஜாயாவும் பெருந்துணை புரிந்தார்.இதனால்தான் ஒவ்வொரு கல்வி முன்னோடியும் தத்தமது காலத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களுக்கேற்ப தமது முயற்சிகளை வெற்றி பெறச் செய்ய முனைந்ததோடு பெண் கல்வி முன்னேற்றத்திலும் கரிசனை எடுத்தனர் எனலாம்.

முஸ்லிம்களின் கல்விக்காக மட்டுமன்றி சமூகத்தின் பொது நலன்களுக்காகவும் ஜாயா செயற்பட்டார்.வெள்ளிக் கிழமை ஜும்மாவுக்கான விடுமுறை,முஸ்லிம் விவாக விவாகரத்து, டொனமூர் யாப்பில் சிறுபான்மை பிரதிநிதித்துவ த்தை பாதுகாத்தல்,அகில இலங்கை முஸ்லிம் லீக், முஸ்லிம் கல்விச் சங்கம்,முஸ்லிம் கல்விச் சகாய நிதியம்,அகில இலங்கை ஆசிரியர் சங்கம்,கொழும்பு ஆசிரியர் சங்கம்,இலங்கை அதிபர் சங்கம்,இலங்கை தேசிய காங்கிரஸ் (உப தலைவர்) என பல்வேறு அமைப்புக்களின் தலைமைத்துவத்திலிருந்து செயலாற்றியுள்ள மையும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறே தேசிய தலைவர்களுடன் சேர்ந்து நாட்டின் சுதந்திரத்திற்கும் சுயாதீனத்திற்கும் பாடுபட்டு சகோதர சமூகத்தின் நன்மதிப்பிற்கும் பாத்திரமானார்.இலங்கை சுதந்திரம் பெறுவதற்கான பல நடவடிக்கைகளிலும் ஜாயா முன்னிலை வகித்தார்.தனது சமுதாயத்தின் நலன்களைப் பரந்த தேசிய நலன்களுக்கு உட்படுத்தல் அவசியம் என்ற அவரது தீர்மானம் அவரது பொது வாழ்வில் முக்கியமானதொரு அம்சமாகும்.இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவதற்கும் அதனால் சிறுபான்மையினர் பாதிக்கப்படாதிருக்கவும் 3/4 பெரும்பான்மையை சோல்பரி ஆணைக்குழு கோரியபோது ஏனைய சமூகத்தவர்கள் 50:50 கோரிக்கைகளை முன்வைத்தபோது ஜாயா அவர்கள் ”என்னைப் பொருத்தவரை அரசியல் சுதந்தரத்தைவிட வேறெந்த உரிமையும் பெரிய உரிமையென நான் கருதவில்லை”11 என நாட்டு சுதந்திரத்தையே முன்னிலைப்படுத்தினார்.

“இலங்கை சட்ட மசோதா”குழுவின் தலைவராக இருந்த மாண்புமிகு பண்டாரநாயக்க அவர்கள் “இந்நாட்டு மக்களில் பலதரப்பட்டோரிடையே தாராள நோக்கு மூலம் ஒற்றுமையை கொண்டு வர எவராலாவது முடிந்ததென்றால்:அதுவும் தம்மினத்தவர் இழப்புக்கு ஆளாகுவர் என்ற நிலையிலும் அதனை செய்தாரென்றால் அதற்கான புகழ் எம் எல்லோரையும் விட நியமன அங்கத்தவர் ஜாயா அவர்களையே சென்றடைய வேண்டும்.இன்று (1945-11-09) அவர் ஆற்றிய உரை இந்நாட்டு மக்களிடையே ஒற்றுமையையும்,இப்போராட்டத்துக்கு நிதர்சனமான தன்மையையும் கொண்டு வருவதில் பாரிய அனுகூலத்தை ஏற்படுத்தும்” 12 எனப் புகழ்ந்தார். அதேபோல் இந்நாட்டின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க அவர்களும் “முஸ்லிம் சகோதரர்களின் நிதானமான போக்கைக் கண்டு நாம் அனைவரும் பாராட்டுகின்றோம். சிங்கள் அடக்குமுறை என்ற ஒரு கட்டுக் கதையை அவர்கள் கூறவில்லை.அவர்களது தேவையை பூர்த்தி செய்ய நாம் முனைகின்றோம்.”என விதந்துரைத்தார்.எனவே சட்ட சபை அங்கத்தினராக (1936 - 1947)இருந்த அவரது அரசியல் வாழ்வு இலங்கையின் சுதந்திரத்திற்கு வழிவகுத்த பொற்காலமாக அமைந்ததை அனைத்து சமூகத்தினரும் அறிவர்.

1947 தொடக்கம் 1958 வரை இலங்கையின் முதலாவது அமைச்சரவையில் தொழில் சமூக சேவைகள் அமைச்சர் பதவியை அடைந்த ஜாயா இலங்கையின் தேசிய கொடியை வடிவமைக்கும் குழுவிலும் இணைக்கப்பட்டார்.

தேசிய கொடி தொடர்பான கலந்துரையாடல்கள் பாராளு மன்றத்தில் இடம்பெற்ற வேளையில் 1948 ஜனவரி- 16 ஆம் திகதி மட்டகளப்பை பிரதிநிதித்துவப் படுத்திய அமைச்சர் சின்னலெப்பை அவர்கள் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் கால கொடியையே எமது நாட்டின் தேசிய கொடியாகப் பயன்படுத்தும் ஆலோசனையை முன்வைத்தார்.எனவே பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க அவர்கள் ஒரு விசேட குழுவை நியமித்தார். அக்குழுவில் எஸ்டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க (தலைவர்),செனரத் பரணவிதான(செயலாளர்) டி.பி. ஜாயா,ஜீ.ஜீ.பொன்னம்பலம், ஜே.ஆர்.ஜெயவர்தன, ஜோன் கொத்தலாவல என பலரும் அங்கம் வகித்தனர். எனவே ஜாயாவின் வாழ்க்கை மிகச் சிறந்த முன்மாதிரியாகவும் இந்நாட்டில் தனது இனத்துக்காக மட்டுமன்றி முழுநாட்டிற்குமே தனித்துவமான தேசிய தலைவராகத் திகழ்ந்துள்ள மையை அறிய முடிகிறது. இதனால்தான் 2016 ஆம் ஆண்டிலிருந்து நடை முறையில் இருக்கும் பாடத்திட்டத்தில் தரம் -10 இற்கான சிங்கள மொழியிலக்கிய பாடநூலில் 97-102 பக்கங்களில் மிகப்பெரியதொரு ஜாயா பற்றிய கட்டுரையை உள்ளடக்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.



இத்தகு புகழ்மிக்கவராகத் திகழ்ந்த ஜாயா ஆசிரியராக அதிபராக ஒரு சிறந்த அரசியல் தலைவராக என பல படிநிலைகளிலுமிருந்து முஸ்லிம் சமூகத்தின் கல்வியிலும் நாட்டிலும் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தியோடு 1950 தொடக்கம் 1957 வரை பாகிஸ்தானில் இலங்கைக்கான உயர் ஸ்தானிகராகவும் இலங்கை பிரதமரால் நியமிக்கப்பட்டார்.இவரது பணிகளுக்கும் திறமைகளுக்கும் சான்றாக 1951-12-22 அன்று பஞ்சாப் பல்கலைக்கழகத் தினால் கௌரவ கலாநிதி பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார். இந்தியாவில் செய்யது அகமதுகான் போன்று இலங்கையில் யார் தோன்றுவார் என முஸ்லிம் சமூகத்தின் விடிவுக்காக ஏங்கிய கலாநிதி டி.பி ஜாயா அவர்களே செய்யது அகமதுகானாக மாறி எம் சமூகத்தை உயரச் செய்து தனது இறுதி மூச்சு வரை சமூகப் பணிகளைத் தொடர்ந்திருந்தார். இத்தகு சேவையாளருக்கு இறைவனே அளித்த பரிசாக 1960 மே மாதம் 14 ஆம் திகதி புனித ஹஜ் பயணத்தை மேற்கொண்டிருந்த நிலையில் மக்கமா நகரிலேயே இவ்வுலகிலிருந்து விடை பெற்றுக் கொண்டார்.அவரது ஜனாஸா சவுதி அரசின் மரியாதைகளுடன் நல்லடியார்கள் உறங்கும் ஜன்னத்துல் பக்கியில் நல்லடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**ஆய்வும் எழுத்தும்**
**ஜெஸீமா ஹமீட்**
BA(Hons),MA(History),
PGDE,
Lecturer(history)-B.ED,
Resource Person – Zonal
Education Office matale.

**சான்றாதாரம்**

1.கமால்தீன் எஸ்.எம்.(1990) கலாநிதி துவான் புர்ஹானுத்தீன் ஜாயா, (தமிழாக்கம் ஜெமீல்,எஸ்.எச்.எம்),தேசியக் கல்வி நிறுவகம்,மகரகம,பக், 4-5
2.ஜெமீல்,எஸ்.எச்.எம். (1990) கலாநிதி ஜாயாவின் கல்விப் பணிகள்,இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்,கல்முனை, பக் 35.
3.ஜெமீல்,எஸ்.எச்.எம்.(2010-12-12) “முஸ்லிம் கல்வி மன்னேற்றத்தில் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாட்டின் பங்களிப்பு” நவமணி பத்திரிகை -பக்-10
4.ஜெமீல்,எஸ்.எச்.எம்.(2010-10-31) “20 ஆம் நூற்றாண்டின் கல்வி நிலை” நவமணி பத்திரிகை -பக்-10
5.உதயம் ஜாயா மலர்,உதயம் வெளியீடு 29-05-1981
6.ஜெஸீமா ஹமீட்.(2020-06-05) “இலங்கை தேசிய கொடியின் தனித்துவம்” விடிவெள்ளி பத்திரிகை.
7. அன்வர்.எம்.ஐ (2019) “சுதந்திர இலங்கையும் முஸ்லிம் சமூகமும்”-இஸ்லாம் கல்வி.காம்.
9.தமீம் எஸ்.எம். (2014) “சேர் செய்யத் அஹமத் கான்,கலாநிதி ஜாயா ஒரு ஒப்பீட்டாய்வு” - களம் வெளியீடு
10.அமீன் .எம்.ஐ.எம்(2013-05-13)- “கலாநிதி டி.பி.ஜாயா” -தினகரன் பத்திரிகை.
11. சிங்கள மொழியும் இலக்கியமும் (2020) “கலாநிதி டி.பி.ஜாயா” கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.பக்-97-102

# 21 முதல் ஆரம்பமான ஷஃபான் மாதம்






**(ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

ஹிஜ்ரி 1447 ஷஹ்பான் மாதத்திற்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி மாலை மஃரிப் தொழுகைக்கு பிறகு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

பிறைக் குழு தலைவர் மௌலவி ஆடீஆ ஹிஷாம் அல் பத்தாஹி தலைமையில் இடம்பெற்ற மாநாட்டில் ஷஹ்பான் மாதத்திற்கான தலைப்பிறை நாட்டின் பல பாகங்களிலும் தென்பட்டதால் 20ஆம் திகதி மாலை மஃரிப் தொழுகைக்கு பிறகு ஆரம்ப மாகின்றது என இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு பிறைக் குழுத் தலைவர் உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

கொழும்பு பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பிறை பார்க்கும் மாநாட்டில் பெரிய பள்ளிவாசலின் தலைவர் தாஹிர் ரசீன் உள்ளிட்ட பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்கள், பிறைக் குழு உறுப்பினர்கள் , அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் பதில் தலைவர் மௌலவி அஷ்ஷெய்க் ரிழா உள்ளிட்ட உலமா சபை உறுப்பினர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஏ . அப்றோஸ் உள்ளிட்ட திணைக்கள அதிகாரிகள் , இலங்கை வளிமண்டல திணைக்கள அதிகாரி மொகமட் ஸாலிகீன் , மற்றும் ஏனைய பள்ளி வாசல்கள், ஸாவியாக்கள் , தரீக்காக்களின் பிரதிநிதிகள், மேமன் சங்க பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# நதீரா வசூக் எழுதிய இரட்டை நூல் வெளியீட்டு விழா

**(எம்.எஸ்.எம். ஸாகிர்)**

நதீரா வசூக் எழுதிய விடியலைத் தேடும் விழிகள் - கவிதை நூல், விழித்தெழு பாப்பா - சிறுவர் பாடல் தொகுப்பு நூல் ஆகிய இரட்டை நூல் வெளியீட்டு விழா கேஃ மாவஃ தல்கஸ்பிட்டிய முஸ்லிம் மகா வித்யாலய கேட்போர் கூடத்தில் (25) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கே/ மாவ/ தல்கஸ்பிட்டிய முஸ்லிம் மகா வித்யாலயத்தின் அதிபர் எம்.எஸ்.எம். ரம்ஸ ான் (நளீமி) தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஹாசிம் ஒமர் பவுண்டேஷனின் பணிப்பாளர் புரவலர் ஹாசிம் ஒமர் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் இஸட்.ஏ.எம். பைஸ ல் நிகழ்வில் சிறப்பு அதிதியாகவும் முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்காவின் தலைவரும் உதயம் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான என்.எம். அமீன் மற்றும் எஸ்.எல்.நௌபர் கபூரி றியாதி ஆகியோர் நிகழ்வில் விசேட அதிதிகளாகவும் கலந்து கொள்கின்றனர்.

மாவனல்லை சப்புமல் நிறுவனப் பணிப்பாளர் அக்ரம் கமாலுதீன், கல்ப் டிரவல்ஸ் பணிப்பாளர் ஐ.எல்.எம். தாஹிர், அரோமா நெசுரல் ரப்பர் நிறுவனத்தின் தலைவர் எம்.எஸ்.எம். நஜீப், ஓய்வுபெற்ற பொறியியலாளர் யூசுப் ஸைனுடீன், மாவனல்லை எச்.எஸ். கலெக்ஸனின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். ஹாசிர், மாவனல்லை பிரதேச சபை உறுப்பினர் எம்.எஸ்.எம். முஹம்மத் நௌஸாத், அரநாயக பிரதேச சபை உறுப்பினர் எம்.எப்.எம். அமீன், தல்கஸ்பிட்டிய குட்நைட் நிறுவன உரிமையாளர் எம்.எஸ்.எம். ரிஸான் ஆகியோர் நிகழ்வில் முதல் பிரதிகளைப் பெறுகின்றனர்.

மாவனல்லை வலய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் நிகழ்வில் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சக்தி எப்.எம், சக்தி டிவியின் சந்தைப்படுத்தல் நிர்வாகியும் அறிவிப்பாளருமான எம்.எச். எம். சௌகி நிகழ்ச்சி தொகுப்பை வழங்குகிறார்.

# அல் அஸ்லாப் நினைவு மன்றத்தின் நான்காவது நினைவுப் பேருரைகள் : சனிக்கிழமை கொழும்பில்

அல்- அஸ்லாப் நினைவுமன்றம் ஏற்பாடு செய்யும் நான்காவது நினைவுப் பேருரைகள் இம்மாதம் 24ம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பி.ப 1.00 மணி வரை கொழும்பு 10 தபால் செயலக கேட்போர் கூடத்தில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

மர்ஹூம்களான முன்னால் அமைச்சர் ACS. ஹமீத், முன்னால் அமைச்சர் TB ஜாயா, நீதிபதி ஆவு அக்பர் ஆகியோர் தொடர்பான பேருரைகள் இந்நிகழ்வில் இடம்சபறவுள்ளை.

இவ்வைபவத்தில் முன்னால் அமைச்சர் AHM பளசி பிரதம அதிதியாகவும் "இன்சைட்" கல்வி நிறுவனத்தின் பிரதிமுதல்வர் கலாநிதி M.T சியாட் முஹம்மத் சிறப்பு அதிதியாகவும் பல்வேறு பாராளுமன்ற உறுப்பினர்கள் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்புப் பேச்சாளர்களாக பேராதெனிய பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுனையாளர் கலாநிதி ஷரீப் அனீஸ், நாடறிந்த சிங்கள மொழிமூல சன்மார்க்கப் பேச்சாளரும் ACE கல்வி நிறுவைத் தின் பிரதி அதிபருமான அஷ் -ஷெய்க் மாஹிர் TD ரம்தீன் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுனையாளர் ஜனாபா ஜெஸீமா ஹமீத் ஆகியோர் வருகைதரவுள்ளளார்.

கடந்த காலத்தில் சமூகத்துக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய ஆளுமைகளை நினைவு படுத்துவதுடன் அவற்றை வரலாற்று ஆவணமாகப் பிரசுரிக்கும் பணியும் இவ்வாறான பேருரைகள் மூலம் நடத்தப்படுவதாக அல் அஸ்லாப் தலைவர் MHM நியாஸ் தெரிவிக்கிறார்.

நினைவுப் பேருரைகள் இடம் பெறவுள்ள மூவரினதும் வாழ்ககைச் சுருக்கத்தை இக் கட்டுரை மூலம் தருகிறோம்.

இதற்கான தகவல்களை சிரேஷ்ட சட்டத்தரணி T.K அஸூர், சிரேஷ்ட சட்டத்தரணி மாஸ் யூசுப், சிரேஷ்ட ஊடகவியளாலர் லதீப் பாரூக் ஆகியோர் பெற்றுத்தந்தனர்.

தொகுப்பு: ஏ. ஹில்மி முஹம்மத் (SLAS – Rt) அல் அஸ்லாப் பொதுச்செயலாளர். (முன்னால் தகவல் திணைக்கள பணிப்பாளர்)

# கைக்குண்டுகளுடன் பயணித்த கமாண்டோ வீரர் கைது

**(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)**

வெடிபொருட்களைப் பயன்படுத்தி உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மூன்று கைக் குண்டுகளை எடுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் பயணித்த முன்னாள் கமாண்டோ வீரர் ஒருவரை கைது செய்துள்ளதாக அனுராதபுரம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் அனுராதபுரம் மாத்தளை சந்தி சமகபுர பகுதியைச் சேர்ந்த முன்னாள் இராணுவ கமாண்டோ வீரர் என பொலிசார் தெரிவித்தனர்.

அனுராதபுரம் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பதில் கடமை பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.எம். கே.கருணாரத்ன உள்ளிட்ட குழுவினர் அனுராதபுரம் புல்லையார் சந்தி சாலிய மாவத்தை ஒட்டோவெஸ் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது ஒரு பாலர் பாடசாலைக்கு முன்னால் சந்தேக நபரை கைது செய்ததாக தெரிவித்தனர்.

சந்தேகத்திற்கு இடமான விதத்தில் வீதியில் பயணித்த நபரை தடுத்து நிறுத்தி சோதனைக்குட்படுத்திய போது மறைத்து வைத்திருந்த நிலையில் இந்த கைக்குண்டுகளை கைப்பற்றியுள்ளதுடன் ஏதோ ஒரு திட்டமிட்ட குற்றச் செயலை மேற்கொள்வதற்கு எடுத்துச் சென்றிருக்கலாம் என சந்தேகிப்பதாக பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அனுராதபுரம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஏழை மக்கள் அஸ்வெசும திட்டத்தில் பாதிப்படைந்தனர்

**உதுமாலெப்பை பாராளுமன்றத்தில் தெரிவிப்பு**

**(கே எ ஹமீட்)**



நமது நாட்டில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 37 இலட்சம் ஏழை மக்களுக்காக செயற்படுத்தப்பட்டு வரும் அஸ்வெசும திட்டம் மக்களுக்கு பயனுள்ள திட்டமாகும்.

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வரும் சமுர்த்தி அமைச்சுக்கும், உலக வங்கி பணிப்பாளருக்கும் மக்கள் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் கீழ் அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் அங்கீகரிப்பதற்கான விவாதம் 20.01.2026ல் பாராளுமன்றத்தில் நடைபெற்ற போது அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், எமது நாட்டில் இதுவரை அபிவிருத்தி திட்டங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் எல்லாம் மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம சேவகர்களின் ஆலோசனைகளைப் பெற்றே முன்னெடுக்கப்பட்டு வந்தன.

ஆனால் அஸ்வெசும திட்டத்தின் பயனாளர்களின் தகவல்களை பெறுவதற்காக திடீர் என இளைஞர் குழு ஒன்றை நியமனம் செய்து அஸ்வெசும திட்டத்தில் ஒரு வீட்டின் தகவல்களை தருபவருக்கு ஷரூபா 300 கொடுப்பனவு வழங்கப்பட்டு பெறப்பட்ட தகவல்களினால் அம்பாறை மாவட்டத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரம் வறுமைக்கோட்டின் வாழும் 550 ஏழை மக்கள் அஸ்வெசும திட்டத்தில் தங்களை இணைக்குமாறு பிரதேச செயலாளருக்கு மேல்முறையீடு செய்துள்ளனர்.


எனவே, அஸ்வெசும திட்டம் தொடர்பான வழிகாட்டல்களை மாவட்ட செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும் வழங்கி அது தொடர்பான விசேட கூட்டங்களை ஏற்பாடு செய்து அஸ்வெசும திட்டத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ள மக்களை அஸ்வெசும திட்டத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும் என அமைச்சின் துறைசார் மேற்பார்வைக் குழு கூட்டத்தில் தெரிவித்தேன்.

இதேவேளை நேற்று 19.01.2025 ம் திகதியன்று நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் WBB/Operations/Policies/03 ம் இலக்க சுட்டு நிருபம் ஒன்று அவசரமாக வெளியிடப்பட்டு மாவட்ட செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும், துறை சார்ந்த திணைக்கள தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றறிக்கையில் கிராம சேவகர் பிரிவுகளில் அமைக்கப்பட்டுள்ள பிரஜா சக்தி இயக்கத்தின் தலைவரையும், செயலாளரையும் அஸ்வெசும பயனாளிகளை தெரிவு செய்யும் குழுக்களில் பார்வையாளர்களாக நியமித்துள்ளதாக சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 19.01.2026 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட இச் சுற்று நிஷரூபத்தின் பிரதியினை இப்பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

கடந்த காலங்களில் வறுமையை ஒழிப்பதற்கு பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. நான் அட்டாளைச்சேனை கிராமோதய சபையின் தலைவராக 1985ம் ஆண்டில் பதவி வகித்தேன். கிராமோதய சபையில் ஊர் தலைவர்கள், கிராம மட்டத்தில் அமைந்துள்ள மார்க்க தலைவர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், பொதுப்பணிகள் செய்யும் இயக்கங்களின் தலைவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து கிராமோதய சபையின் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள் ஆனால் பிரஜா சக்தியின் தலைவரை தெரிவு செய்யும் கிராமத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபை உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், பொது இயக்கங்களின் தலைவர்கள் இருக்கத்தக்கதாக இரகசியமான முறையில் பிரஜா சக்தி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இது ஜனநாயக விரோத செயற்பாடாகும். ஒரு கட்சியின் பிரஜா சக்தியின் தலைவரும், செயலாளரும் "அஸ்வெசும" திட்டத்தில் பயனாளிகளைத் தெரிவு செய்யும் கூட்டத்தில் பார்வையாளர் களாக கலந்து கொள்ள அமைச்சினால் சுற்று நிருபத்தினை அவசரமாக அனுப்பியுள்ளனர். அவ்வாறாயின் ஏனைய கட்சிக் கிளைகளின் தலைவர்கள், செயலாளர்களும் பார்வையாளர்களாக கலந்து கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். இல்லை யெனில் அரசியல் பிரதிநிதிகள் யாருமின்றி அஸ்வெசும திட்டத்தை சுதந்திரமாக செயற்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை தெரிவித்தார்.



# வெள்ளத்திற்குப் பிறகு ஒரு தந்தையின் மௌனப் போர்

வெள்ளம் வருவதற்கு முன்பே அன்றாடம் உழைத்து குடும்பம் நடத்தும் பல தந்தைமார்களுக்கு வாழ்க்கை ஒரு போராட்டமாகவே இருந்தது.

நாட்டின் பொருளாதாரம் தளர்ந்து கொண்டிருந்த நேரம். விலைகள் உயர்ந்துகொண்டே இருந்த நேரம்.

ஒரு தினசரி தொழிலாளருக்கோ "இன்று வேலை செய்தாலே நாளைய வாழ்க்கை நடக்கும் என்று இருந்தது.

அவரின் தினசரி சம்பளம் ரூ.1500 – ஆக இருக்கும்.

அதுவும் வேலை செய்தால் மட்டுமே.

நான்கு முதல் ஆறு பேர் கொண்ட குடும்பத்தின் தேவைகளை அந்த தொகை நிறைவேற்ற வேண்டும், மின்சாரம், நீர், போக்குவரத்து, பள்ளிச் செலவுகள் எல்லாவற்றையும் அந்த தொகையில்தான் சுமக்க வேண்டும்.

அது போதுமானதல்ல என்பது தற்கால பொருளாதரச் சூழலில் எல்லோருக்கும் தெரியும்.

அதிகமான தினசரித் தொழிலாளர்கள் தம் பசியை அடக்கப் பழகினார்.

கனவுகளைச் சிறியதாகக் குறைத்துக் கொண்டார்.

சோர்ந்திருந்தாலும் தோள்களில் குடும்பத்தை மௌனமாகச் சுமந்தனர்.

அவர்கள் வலியை அனுபவித்தனர். வலிகளோடு வாழப் பழகினர்.

ஆனால் அதை சொல்லிச் சொல்லி இருக்கவில்லை.

ஏனெனில் தந்தை என்கின்ற உயர்வான பாத்திரத்தை நெஞ்சில் உறுதியாக விதைத்திருந்தனர். இப்போதும் அப்படித்தான்.

காலம் இப்படிக் கழியும் போது வெள்ளம் வந்தது. பல தொழில் நிறுவனங்கள் கடைகளை முற்றுமுழுதாக அது மூழ்கடித்தது.

நீர் விலகிச் சென்றாலும் விற்பனை பொருட்களை குப்பைகளாக்கிவிட்டு..

பல தினசரித் தொழிலாளிகளின் வாழ்வாதாரத்தையும் எடுத்துச் சென்றது.

கடைகள் மூடப்பட்டன.

சிறு தொழில்கள் சாய்ந்தன.

தினசரி தொழிலாளர்கள் தெரு மூலைகளில் முடங்கி நின்றனர்.

வேலைக்காக அல்ல,

வேலைநிலையங்களை எப்போது திறப்பார்கள் என்ற ஏக்கத்தில்.

நாட்கள் சென்றன.

வாரங்கள் சென்றன.

பல அன்றாட தொழிலாளர்களின் கைகள் காலியாகின.

ஆனால் வீட்டிலுள்ள கண்கள் கேள்விகளால் நிரம்பின.

சில குடும்பங்கள் சேமிப்பால் உயிர்வாழ்ந்தன.

சிலர் தங்கள் மனைவிகளின் கடைசி பாதுகாப்பான தங்க நகைகளை

விற்றனர்.

சிலர் கடன் வாங்கி நாளைய வாழ்க்கையை

அடகு வைத்தனர்.

வீடுகளுக்குள் இருந்த மௌனம் மன அழுத்தமாக மாறியது. சில வீடுகளில்

அது வாக்குவாதமாக உருவெடுத்தது.

வாக்குவாதம் கண்ணீராக பொங்கியது.

இதெல்லாம் அன்பு குறைந்ததால் அல்ல

வருமானம் வராததால்.

இப்போது 2025 முடிவடைந்துவிட்டது.

2026 கதவைத் திறந்து வந்துவிட்டது.

பள்ளிக் கட்டணம்,

சீருடை, புத்தகங்கள்,

புத்தகப்பை, பாதணிகள்......!

இது

இன்னொரு புயலாக மாறியது.

இது நீரின் புயல் அல்ல,

கவலையின் புயல்.

ஒரு தந்தையின் உள்ளத்தில் மௌனமாக வீசுகிற புயல்.

இரவில் தலைவைத்ததும்

ஒரே ஒரு கேள்வி

அவரின் மனதை கிழிக்கிறது.

"இன்றைய நாளையே காப்பாற்ற முடியாத நான்,

எப்படி என் பிள்ளைகளின் நாளையை காப்பாற்றுவேன்?"

இது ஒரே ஒரு மனிதனின் கதை அல்ல.

இது நூற்றுக்கணக்கான தினசரி தொழிலாளர்களின்

மறைக்கப்பட்ட வலி.

அவர்கள் வெளியில் அழுவதில்லை.

அவர்கள் கூச்சலிடுவதில்லை.

அவர்கள் மௌனமாக ஏக்கத்தை இரத்தமாக சிந்துகிறார்கள்.

மீண்டும் கடைகள் திறந்து வேலை கிடைத்தாலும், அவர்களிடமிருந்த உள்ளத்தில் எழுதப்பட்ட இந்த வலி இலகுவாக நீங்கிவிடாது.

அவர்களே இந்த நாட்டைத் தாங்கும் உடைந்த முதுகுகள்.

ஆனால் நாடு

அவர்களைத் தாங்க என்ன செய்கிறது என்ற கேள்வி பலரின் எண்ணங்களில் உருவாகலாம்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---




**பயாஸா பாஸில்**

# பொழுதுபோக்குகளை விட்டு விலகும் பிள்ளைகள்

மாணவப் பருவம் என்பது மனமும் உடலும் ஒருங்கிணைந்து வளர வேண்டிய மிக முக்கியமான காலமாகும். இந்த வளர்ச்சிக்கு கல்வியுடன் சேர்த்து பொழுதுபோக்குகள் பெரும் பங்கு வகிக்கின்றன. ஆனால் இன்றைய சமூக சூழலில் பல பிள்ளைகள் தங்களின் இயல்பான பொழுதுபோக்குகளை விட்டு விலகி வருவது கவலைக்கிடமான நிலையாக உள்ளது.

முன்னைய காலங்களில் பிள்ளைகள் ஓவியம் வரைதல், பாடல் பாடுதல், விளையாட்டுகள், புத்தகம் வாசித்தல், நடனம், நாடகம் போன்ற பல்வேறு பொழுதுபோக்குகளில் ஈடுபட்டனர். அவை அவர்களின் படைப்பாற்றல், தன்னம்பிக்கை, சமூக உறவு மற்றும் மனநலத்தை மேம்படுத்த உதவின. ஆனால் இன்றைய காலத்தில் கல்விச் சுமை, பெற்றோரின் அதிக எதிர்பார்ப்பு, தேர்வு மையமான கல்வி முறை ஆகியவை பிள்ளைகளை ஒரே பாதையில் கட்டுப்படுத்தி விட்டன.

மேலும் கைப்பேசி, தொலைக்காட்சி, கணினி விளையாட்டுகள் போன்ற தொழில்நுட்ப சாதனங்கள் பிள்ளைகளின் நேரத்தை முழுமையாக ஆக்கிரமித்து வருகின்றன. இதனால் உடல் இயக்கம் குறைந்து, சோம்பல், மனஅழுத்தம், தனிமை போன்ற பிரச்சினைகள் உருவாகின்றன. உண்மையான பொழுதுபோக்குகளை விட, திரை சார்ந்த பொழுதுபோக்குகள் மேலோங்கி வருவது பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சிக்கு தடையாக உள்ளது.

பொழுதுபோக்குகளை விட்டு விலகும் பிள்ளைகள், தங்களின் திறமைகளை கண்டறியும் வாய்ப்பை இழக்கிறார்கள். இது எதிர்காலத்தில் அவர்களின் வாழ்க்கைத் தேர்வுகளிலும் தன்னம்பிக்கையிலும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். கல்வி மட்டுமே வாழ்க்கையின் இலக்கு அல்ல என்பதை உணர்த்துவது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் முக்கியப் பொறுப்பாகும்.

எனவே பிள்ளைகள் தங்களின் விருப்பமான பொழுதுபோக்குகளில் ஈடுபட நேரமும் ஊக்கமும் வழங்கப்பட வேண்டும். பாடசாலைகள் இணைச் செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளின் ஆர்வங்களை புரிந்து கொண்டு, அவர்களை ஆதரிக்க வேண்டும். அப்போதுதான் உடல், மனம், அறிவு ஆகிய மூன்றிலும் சமநிலை கொண்ட சிறந்த தலைமுறை உருவாகும்.

பொழுதுபோக்குகள் பிள்ளைகளின் வாழ்க்கையில் அத்தியாவசியமானவை. அவற்றை புறக்கணிக்காமல், வளர்த்தெடுத்தால் மட்டுமே பிள்ளைகள் மகிழ்ச்சியும் திறமையும் நிறைந்த மனிதர்களாக வளர முடியும்.

உங்கள் பிள்ளைகளுக்கான பொழுதுபோக்குகளை ஊக்குவியுங்கள். தற்போதைய நவீன காலத்தில் வளர்ந்துவரும் பிள்ளைகளிடையே பொழுதுபோக்கு என்ற அம்சமே மறைந்து போயுள்ளது. நவீனமயப்படுத்தப்பட்ட தொழில் நுட்ப வளர்ச்சியின் பக்கம் பிள்ளைகள் ஈர்க்கப்படுகின்றார்கள். அது காட்டும் கவர்ச்சி பிள்ளைகளை அசுர வேகத்தில் ஈர்த்தெடுக்கிறது.

அதனால், பிள்ளைகளின் ஆற்றல் மற்றும் திறனை வளர்க்கக்கூடிய பொழுதுபோக்குகள் அருகி வருகின்றன என்றே சொல்லலாம்.



பிள்ளைகளுக்கான பொழுதுபோக்குகள்

- ஓவியம் வரைவது
- புத்தகம் வாசித்தல்
- தோட்டம் அமைத்தல்
- பாடல் பாடுதல்
- கைவினைப் பொருட்கள் செய்தல்
- முத்திரை சேகரித்தல்
- கதைப் புத்தகம் படித்தல்
- நாடகம் அல்லது நடிப்பு
- விளையாட்டு
- தையல்
- புதிர் (Puzzle), சுடோக்கு

இது போன்ற பலவகையான பொழுதுபோக்குகளை முன்வைக்கலாம்.

# வடமத்திய மாகாண பாடசாலைகளுக்கு கணினி உபகரணங்கள் வழங்கி வைப்பு






(எம்.ரீ.ஆரிப் )

பிரதமரின் பணிக்குழுவும் கல்வி அமைச்சும் இணைந்து வடமத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலை களுக்கு ஸ்மார்ட் போர்டுகள், கோட்டக் கல்வி அலுவலகங்க ளுக்கு கணினி இயந்திரங்கள் மற்றும் விஞ்ஞான பிரிவின் மேம்பாட்டு திட்டங்களுக்கும், அந்த பாடங்களை கற்பிக்கும் பாடசாலைகளுக்கும் மடிக் கணினிகள் வழங்கும் நிகழ்வு வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச தலைமையில் அனுராதபுரம் மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
இதன் போது 200 ஸ்மார்ட் போர்டுகள், 30 கணினிகள் மற்றும் 07 மடிக்கணினிகள் விநியோகிக்கப்பட்டன. கல்வியின் டிஜிட்டல் மாற்றத்தின் தொடக்கமாக பாடசாலைகளில் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மொத்த பெறுமதி ஏழு மில்லியன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள்




(பீ.எம். முக்தார்)

களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் விஷேட கூட்டம் தர்ஹா நகர் மொஹம்மத் ஜஸ்லியின் இல்லத்தில் நடைபெற்றது.
மாவட்ட தலைவர் அல்ஹாஜ் தாஹிர் பாஸி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முன்னால் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் உப தலைவர் பௌஸர் பாரூக் உட்பட பல முக்கியஸ்தர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.
எதிர்கால வேலைத் திட்டங்கள் பற்றியும் வருடாந்த மாநாடு மற்றும் இளைஞர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி மற்றும் செயலமர்வுகளை நடாத்துவது தொடர்பாகவும் இக்கூட்டத்தில் கலந்துரையாடப் பட்டது.
மேலும் களுத்துறை மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, பௌதீகவள பற்றாக்குறை தொடர்பாக மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூஸூபை சந்தித்து கலந்துரையாடவும் தீர்மானிக்கப்பட்டது.

## தீந்தமிழ் கலை இலக்கிய அறக்கட்டளையின் நூல் வெளியீடும் அறிமுக விழாவும்



( ஐ. ஏ. காதிர் கான் )

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் அருகே தெற்கு கள்ளிக்குளம், திருநெல்வேலி தெஷண மாற நாடார் சங்கம் கல்லூரியில், தீந்தமிழ் கலை இலக்கிய அறக்கட்டளை நிகழ்த்திய பொங்கல் விழாவில், நாகர்கோவிலைச் சேர்ந்த இறையன்பன் அரவிந்தன் எழுதிய "பரப்பிரம்மம்" என்ற நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.
இவ்விழாவில் நூலின் பதிப்பாசிரியர் கவிதைக்களம் கவி-பாவை குழுமத்தின் தலைவர் கலைமாமணி கவிபாவை கார்த்திக், நூலாசிரியருக்கு "பிரம்ம ஜோதி" மற்றும் "பரம புருஷ விருது" வழங்கி கௌரவித்தார்.
திருச்சி மாவட்டத்தின் முன்னாள் துணை ஆட்சியர் கவிஞர் பவேரா மணிவேலன், வாழ்த்துரை வழங்கியதோடு, கல்லூரியின் செயலாளர் மற்றும் தலைவர் ஆகியோருக்கு நூலாசிரியர் நினைவுப் பரிசுகளை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## சிறப்பாக நடைபெற்ற "அத்தீன் - ஹதீஸ் ஜிப்ரில் விளக்கம்" நூல் வெளியீடு





( பீ.எம். முக்தார்)

கொழும்பு இத்திஹாத் அஹ்லிஸ்ஸ/ன்னதி அமைப்பால் அரபுக் கல்லூரி உயர் வகுப்பு மாணவர்களுக்கு நடாத்திய கல்விக் கருத்தரங்குகளின் அரபு மொழி கையேடுகளின் தமிழாக்க நூல் (18) கொழும்பு அக்ரபோல் உணவக மண்டபத்தில் அதன் தலைவர் டாக்டர் பஹ்மி இஸ்மாயீலீன் தலைமையில் நடைபெற்றது.
இதில் காலி அலிய்யா அரபுக் கல்லூரி பணிப்பாளர் கலீபதுல் குலபா மௌலவி ஸஹூர் (பாரி), அஸ்ஸெய்யித் பலாஹ் ஹபஷி மௌலானா, கலீபதுஷ் ஷாதுலிகளான மௌலவி இஸ்திகார் (பாரி), மௌலவி பஸ்லான் (அஷ்ரபி - பீ. ஏ ), மௌலவி அஹ்மத் ஸூபி (மஹ்ழரி) உட்பட இன்னும் பல உஸ்தாத்மார்களும், இத்திஹாத் அஹ்லஸ் ஸ/ன்னதியின் உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.
அரபு மொழியில் வழங்கப்பட்ட 10 கையேடுகளின் தமிழாக்கத்தை பன்னூலாசிரியரும் ஜாமிஅதுல் பாஸிய்யா கலாபீட அதிபருமான மௌலவி அஸ்மிகான் அலியார் (முஅய்யிதி) செய்திருந்தார்.
நடைபெற்ற இந்நிகழ்வில் மௌலவி அஹ்மத் ஷாஹ் (ஜமாலி) நூல் ஆய்வுரை வழங்கினார். அதில் அவர் தொடர்ந்து கூறியதாவது :
இந்நூல் ஒவ்வொரு வீடுகளிலும் இருக்க வேண்டிய நூலாகும்.
இதன் மூலம் நேரான பாதையை ஒவ்வொருவருக்கும் விளங்கிக்கொள்ள முடியும். இதை சிங்கள, ஆங்கில மொழிகளில் மொழிமாற்றம் செய்து வெளியிடுவது காலத்தின் தேவையாகும் என்றார்.
இறுதியாக இந்நிகழ்வு கலீபதுஷ் ஷாதுலி மௌலவி இஸ்திகார் (பாரி) யின் துஆ பிரார்த்தனையோடு நிறைவுபெற்றமை குறிப்பிடத்தக்கது.



மறைந்த ஊடகவியலாளர் சுந்தரம் தினேஷின் பூதவுடலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இறுதி அஞ்சலி செலுத்தினார்.

## குறிஞ்சிப்பிட்டி பாலர் பாடசாலையில் இடம்பெற்ற புதிய மாணவர் உள்வாங்கும் நிகழ்வு



(சியாஜ்)

கற்பிட்டி குறிஞ்சிப்பிட்டி வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் சாந்த மரியா பாலர் பாடசாலையின் புதிய மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வு புதன்கிழமை (14) பாலர் பாடசாலையில் இடம்பெற்றது.
இந்நிகழ்வின் பிரதம அதிதியாக குறிஞ்சிப்பிட்டி கிராம உத்தியோகத்தர் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஆர். எம் அஸ்கர் கலந்து கொண்டு பிள்ளைகள் அமானிதம் என்ற தலைப்பில் பெற்றோர்களுக்கு விளக்கமளிக்கும் வகையிலும் சிறார்களின் எதிர்காலம் குறித்தும் இன்று சமூகம் எதிர்நோக்குகின்ற பாரிய சவால் மற்றும் முகம் கொடுக்கும் போதை பிரச்சினை தொடர்பாகவும் தெளிவூட்டப் பட்டது.
இந்நிகழ்வில் அதிதிகளாக சார்ந்த மரியா மீன்பிடி சங்கத்தின் தலைவர் பீ.கே.பீ கென்சி நோனிஸ் ஆசிரியர் மிதந்து நோனீஸ் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய கடற்படையால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ரிப் படகு






(சியாஜ்)

இலங்கை மற்றும் இந்திய கடற்படைகளுக்கு இடையிலான கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில், இந்திய கடற்படையால் இலங்கை கடற்படைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ரிப் படகு வியாழக்கிழமை (15) கொழும்பு துறைமுகத்தில் உள்ள மேற்கு கடற்படை கட்டளை தலைமையகத்தில் இலங்கை கடற்படையிடம் உத்தியோகப்பூர்வமாக ஒப்படைக்கப்பட்டது.

அதன்படி, பதின்மூன்றாவது (13) இந்தியா-இலங்கை பணியாளர்கள் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட இந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் Srinivas Maddula வின் தலைமையில் இந்த ரிப் படகின் உத்தியோகப்பூர்வ கையளிப்பில், இலங்கை கடற்படை சார்பாக மேற்கு கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் ஜகத் குமார கலந்து கொண்டார்.

மேலும், இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் இரு தரப்பினருக்கும் இடையே நினைவுப் பரிசுக்களும் பரிமாற்றி கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## "காலங்கள் பேசும் காவியங்கள்" கவிதை நூல் சென்னை புத்தகக் கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது

( ஐ. ஏ. காதிர் கான் )

கவிதைக்களம் கவிபாவைக் குழுமத்தின் சார்பாக, சென்னை புத்தகக் கண்காட்சியில் வசந்த பதிப்பக அரங்கு எண் 590 இல், தொகுப்பாசிரியர் கலைமாமணி கவிபாவை கார்த்திக் தொகுத்த 10000 கவிதைகள் கொண்ட "காலங்கள் பேசும் காவியங்கள்" என்ற 2024 ஆம் ஆண்டு வெளிவந்த நூல் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்த நூலை, இந்திய சொட்டு நீர்ப்பாசனத்தின் தந்தை வேளான் வல்லுநர் அக்ரி ஜேம்ஸ் பிரடெரிக் பார்வையிட்டுப் பாராட்டினார்.

இதன்போது, முனைவர் மோ. பாட்டழகன், பாடலாசிரியர் அழகிரி பாண்டியன், எழுத்தாளர் சங்கமித்திரை ஆகியோரும் உடன் இருந்தனர்.



இப்புத்தகக் கண்காட்சியில், திராவிட முன்னேற்றக் கழக வர்த்தக அணியின் மாநிலத் தலைவர் கவிஞர் காசி முத்து மாணிக்கம் வாழ்த்துக்களையும் பாராட்டுக் களையும் தெரிவித்தார்.

இவ்வரங்கில் பட்டயக் கணக்காளர் எழுத்தாளர் சொ. பாசுகரன் வெளியிட்ட "பெயர்த்திச் சிறுமி ஆதினி" உலக சாதனை நூலையும் மக்கள் ஆர்வத்தோடு பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

இந்த 49 ஆவது சென்னை புத்தகக் கண்காட்சி, ஜனவரி 8 ஆம் திகதி முதல் - 21 ஆம் திகதி வரை (14 நாட்கள்), சென்னை - நந்தனம் வை.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





கஹாட்டகஸ்திகிலிய பிரதேச செயலகம் பத்தாவது தடவையாக ஏற்பாடு செய்திருந்த இரத்த தானம் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் ஆர். செந்தில் தலைமையில் பிரதேச செயலகத்தில் (19) நடைபெற்றது போது பிடிக்கப்பட்ட படம்.

(படம் :- எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

## சாய்ந்தமருது அல்-ஹிலால் வளாகத்தை வெளிச்சமூட்டிய றிஸ்லி முஸ்தபாவுக்கு பாடசாலை சமூகம் நன்றி தெரிவிப்பு





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய வளாகத்தை வெளிச்சமூட்டுவதற்காக LED மின்குமிழ் தொகுதிகளை வழங்கிய மயோன் குழும தலைவரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாரை மாவட்ட இளைஞர் அமைப்பாளருமான எம். றிஸ்லி முஸ்தபாவுக்கு பாடசாலை அதிபர் கே.எல். அப்துல் ஜௌபர் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினர் நன்றி தெரிவித்துள்ளனர்.

மயோன் குழும தலைவரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாரை மாவட்ட இளைஞர் அமைப்பாளருமான எம். றிஸ்லி முஸ்தபா (16) பாடசாலைக்குச் சென்று இந்த டுநுனு மின்குமிழ் தொகுதிகளை அதிபரிடம் கையளித்தார்.

பாடசாலை அதிபர் கே.எல். அப்துல் ஜௌபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.முக்தார், மயோன் குழும உறுப்பினர்களான ஏ.எல்.எம். நியாஸ், எச்.எம். ஸிஹாப், பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.எச். லாபிர், ஏ.பி. ரோஷன் டிப்ராஸ், ஒழுக்காற்றுக்குப் பொறுப்பான ஆசிரியர் எம்.எஸ்.எஸ். ஷிப்லி, உதவி அதிபர்கள், ஆசிரிய ஆசிரியைகள், பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சியாக பாடசாலைக்கு பல்வேறு உதவித் திட்டங்களைச் செய்து வரும் றிஸ்லி முஸ்தபாவுக்கு, இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருமே தங்களது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## அ.இ.மக்கள் காங்கிரஸின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளராக Dr. ஹில்மி முஹைதீன் தெரிவு







அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திருகோணமலை மாவட்டத்திற்கான கட்சியின் கட்டமைப்பை பலப்படுத்தும் வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக, மாவட்ட மத்திய செயற்குழு அமைப்பாளர் மற்றும் வட்டார அமைப்பாளர்களுக்கான நியமனங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (11) கிண்ணியா பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கட்சியின் தேசியத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீனின் வழிகாட்டலின் கீழ் , கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான அஷ்ரப் தாஹிரின் ஒருங்கிணைப்பில், கட்சியின் திருகோணமலை மாவட்ட செயலாளரான அனீஸ் தலைமையில் திருகோணமலை மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்களுக்குமான அமைப்பாளர் நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது, திருகோணமலை மாவட்டத்திற்கான அமைப்பாளராக கட்சியின் உயர்பீட உறுப்பினரான வைத்தியர் ஹில்மி முகைதீன் தெரிவு செய்யப்பட்டதுடன், அவருக்கான நியமனக் கடிதமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், கட்சியின் திருகோணமலை மாவட்ட நகர சபை மற்றும் பிரதேச சபை தவிசாளர்கள், பிரதி தவிசாளர்கள், உறுப்பினர்கள், வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



# கியாம நாளுக்கான முன்னோட்டங்களாகவும் அனர்த்தங்கள் அமையலாம்



அஷ்ஷைக் பளீல் (நளீமி)

**பகுதி -03**

**‘அனர்த்தங்கள் ஓர் இஸ்லாமிய பார்வை’**

(கடந்த வார தொடர்...)

8. இரவலாகத் தந்ததை மீளப் பெறுவது இந்த உலகில் மனிதன் சொந்தமாக வைத்திருக்கும் அனைத்தும் அவை சொத்து செல்வங்களாகவோ அவனது உடலாகவோ மனைவி மக்களாக வோ அல்லது ஆற்றல்களாகவோ இருந்தாலும் அவை அடிப்படையில் அவனுக்குரித்துடையவை அல்ல. எல்லாம் அல்லாஹ்வுக்குச் சொந்தமானவையாகும். அந்த மனிதன் இறக்கும் போது உலகிலிருந்து எதையுமே தன்னோடு எடுத்துச் செல்வதில்லை. எனவே, அல்லாஹ் எமக்கு இரவலாகத் தந்தவற்றை எம்மிடமிருந்து எப்படியும், எந்த வேளையிலும் எடுத்துக் கொள்ளும் பூரண உரிமை அவனுக்குண்டு. ஏன் என எமக்கு கேள்வி கேட்க முடியாது. ‘அவன் செய்யும் எதுபற்றியும் அவன் எவராலும் விசாரிக்கப்பட மாட்டான். அவர்கள் (அவர்கள் செய்யும் கருமங்கள் பற்றி) விசாரிக்கபடுவார்கள்.’(அல் அன்பியா- 23) சுனாமி, தித்வா போன்ற ஏதாவது ஓர் அனர்த்தத்தை அனுப்பி அவன் தன்பால் தனது உயிர்களையும் சொத்துக்களையும் எடுத்துக்கொள்வான்.

அபூதல்ஹா(ரழி)வின் ஒரு குழந்தை நோயினால் இறந்த போது அது பற்றி மனைவி உம்மு ஸுலைம்(ரழி) கணவனுக்கு கூறிய ஆறுதல் வார்த்தைகள் இங்கு எமது சிந்தனைக்கு உரியவையாகும்:- “ஒரு சாரார் தமது பொருளொ-ன்றை
இன்னொரு வீட்டாருக்கு இரவலாகக் கொடுத்ததாக வைத்துக் கொள்வோம். கொடுத்த வர்கள் அந்த இரவல் பொருளை திருப்பித் தரும்படி வேண்டும் போது தரமாட்டோம் எனக் கூற முடியமா?” என உம்மு
ஸுலைம்(ரழி) கேட்ட போது கணவர் “ஆட்சேபனை தெரிவிக்க முடியதே” என்றார். அப்போது உம்மு ஸுலைம் “உங்களது (இறந்த) மகன் விடயமாக பொறுமையைக் கடைப்பிடித்து அதன் கூலியை அல்லாஹ்விடம் எதிர்பாருங்கள்” என்றார்கள். (முஸ்லிம் 4/1909)

முழுப் பிரபஞ்சத்திலுள்ள சடப் பொருட்கள், வாயுக்கள், உயிர்கள், மலக்குகள் போன்ற எல்லாப் படைப்பினங்களதும் உண்மையான சொந்தக்காரன் அல்லாஹ் மட்டும் தான். ‘வானங்களிலும் பூமியிலும் உள்ள அனைத்தும் அல்லாஹ்வுக்கே சொந்தமானதாகும்.’(பகரா: 284) என அல்லாஹ் கூறுகிறான்.

எனவே, மனிதன் ‘தனக்குரியவை’ என்று நினைக்கும் அனைத்தையும் இந்தக் கண்ணோட்டத்தில் தான் பார்க்க வேண்டும். ஏதும் துன்பங்கள் பீடிக்கின்ற போது முஃமின் மொழிய வேண்டும் என அல்லாஹ் எதிர்பார்க்கும் வாசகம் பற்றி அல்லாஹ் கூறும் போது: “அவர்களுக்கு ஏதும் சோதனைகள் வந்தால், ‘இன்னா லில்லாஹி வ இன்னா லில்லாஹி ராஜிஊன்’ (நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கு உரியவர்கள், அவனிடமே திரும்பிச் செல்ல இருக்கிறோம்) என்று கூறுவார்கள்” என்கிறான். (பகரா - 156)

இந்த உயர்ந்த மனோநிலைக்கும் அழகிய வார்த்தைக்குமான வெகுமதியாக ‘இவர்களுக்குத் தான் அவர்களது இரட்சகனிட மிருந்து புகழ்ச்சியும், பாவ மன்னிப்பும் கிட்டும். இவர்கள் தான் நேர்வழி பெற்றவர்கள்”.(பகரா:157) என்று கூறுகிறான்.

எனவே, மனிதர்களுக்கு தரப்பட்டவை அவர்களுக்கு உரியவையல்ல என்ற ஆழமான நம்பிக்கை அவர்களது மனதில் வேரூன்றுகின்ற அளவுக்கு அவர்களது ஈமான் பலமடையும். கூலியும் கிட்டும்.

9. மறுமை நிகழ்வுகளை நினைவூட்ட நிலநடுக்கம் அல்லது வெள்ளம் எனும் அனர்த்தம் சில வினாடிகள் மட்டுமே நீடித்தாலும் அது கட்டடங்களை வீழ்த்திவிட்டது. வீதிகளை சேதப்படுத்தி விட்டது. நிலத்தை பிளந்துவிட்டது, வீடுகளை இடித்துவிட்டது, மக்களை சிதறி ஓடச் செய்துவிட்டது. அவர்களை பயமும் பதட்டமும் ஆட்கொண்டு விட்டன. அந்த கோர நிகழ்வுகள் இதயங்களை பிடுங்கியெறியப் பார்த்தன.

இந்த உலகில் சில வினாடிகளே நீடித்த ஒரு நிலநடுக்கத்தால் அல்லது வெள்ளத்தால் இவ்வாறு நிகழ்ந்தால் அல்லாஹ் மறுமை நிகழ்வதற்கு முன்னால் தான் ஏற்படுத்தும் சம்பவங்களது தன்மை பற்றிக் கூறும்போது “பூமி தனது நில நடுக்கத்தால்(கடுமையாக) குலுக்கப்படும் போது.(99:01) “பூமி ஒரேயடியாக அசைக்கப்படும் போது, மலைகள் தூள் தூளாக்கப் படும் போது, அவை பரப்பப்பட்ட புழுதியாக ஆகும்.”(56: 4-5) என அதனை விப்ரிக்கிறான். அப்படி யாயின் அந்த நிகழ்வின் பயங்கரம் எப்படி இருக்கும் என்று சிந்தித்துப் பார்க்கலாம். கியாமத்துக்கான முன்னோட்டங்களாக இவை அமையக்கூடும்.

இது இவ்வாறிருக்க கியாமத் நெருங்கும் போது பூமியதிர்வுகள் அதிகமாகும் என்றும் ஹதீஸ்களில் வந்துள்ளது. “அறிவு கைப்பற்றப் பட்டு, நிலநடுக்கங்கள் அதிகரித்து, காலம் நெருங்கி, சோதனைகள் வெளியாகி, கொலைகள் அதிகரித்து, உங்களுக்கு மத்தியில் சொத்து செல்வங்கள் பெருகும் வரை மறுமை நாள் ஏற்பட மாட்டாது.” (புகாரி:1036) என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

10. கெட்டவர்களுக்கும் நல்லவர்களுக்கும் சேர்த்தே தண்டனை ஆனால், சிலபோது இந்த அனர்த்தங்கள் அல்லாஹ்வின் நல்லடியார்களுக்கான தண்டனை யாகவும் அமையும் என கூறமுடியும். அதாவது அந்த நல்லடியார்கள் தம்மைச் சூழ நிகழும் பாவங்களைப் பற்றிய கரிசனையின்றி, நன்மையை ஏவி தீமையைத் தடுக்காது, ‘தாமும் தம்பாடும்’ என வாழ்ந்தால் தீயவர்களுக்கு இறங்கும் தண்டனை இந்த நல்லடியார்களையும் சேர்த்தே தாக்கும்.

எனவே, அல்லாஹ்! ‘உங்களில் அநீதி இழைத்தவர்களை மட்டுமே பாதிக்காத தண்டனையை நீங்கள் அஞ்சிக் கொள்ளுங்கள். அல்லாஹ் கடுமையாகத் தண்டிப்பவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள்’ (அன்பால் - 25) என்று கூறுகிறான். உலகுக்கு இறங்கும் தண்டனை அநீதியை சகித்துக் கொண்டு வாய்மூடி இருந்தவர்களையும் சூழ்ந்து கொள்ளும் அபாயம் இருப்பதாக அல்லாஹ் இங்கு எச்சரிக்கிறான்.

ஒரு கப்பலில் பிரயாணம் செய்யும் கூட்டத்தார் பற்றி வந்த ஒரு ஹதீஸ ில், கப்பலின் கீழ்மாடியில் இருப்போர் தமக்குத் தண்ணீர் தேவைப்பட்ட போது கப்பலை துளை செய்து கடல் நீரைப் பெற முயற்சிக்கையில் மேல்மாடியில் இருந்தவர்கள் அது கீழ்மாடியில் உள்ளவர்களது செயல் தானே என வாய்மூடி இருந்ததால் கப்பலினுள் வரும் தண்ணீரினால் எல்லோரும் சேர்ந்து மூழ்கும் ஆபத்து ஏற்படும் என நபி(ஸல்) கூறியுள்ள ஹதீஸ் புகாரியில்(2493) பதிவாகியுள்ளது.

‘மக்கள் ஓர் அநியாக்காரனைக் கண்டும் அவனைத் தடுக்கா விட்டால் அல்லாஹ் தனது தண்டனையை அனைவருக்கும் பொதுவாகவே (நல்லவர் கெட்டவர் என்று பாராது) அனுப்புவான்’ (அபூதாவூத்:4338, திர்மிதி:3057) என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆகவே, அந்த பாவிகளது செயல்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் நன்மக்கள் தீமைகளை தடுக்க வேண்டிய விதத்தில் தடுக்காதவர்கள் மற்றும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்யப்பட்டும் திருந்தாதவர்கள் ஆகிய மூன்று சாராரும் அல்லாஹ்வினால் தண்டிக்கப் படலாம்.

ஒருதடவை நபி(ஸல்) அவர்களிடம் ‘எமக்கு மத்தியில் ஸாலிஹானவர்கள் (நன்மக்கள்) இருந்தாலும் நாம் அழிக்கப்படுவோமா?’ என வினவப்படுவதற்கு “ஆம். பாவச் செயல்கள் அதிகரிக்கும் போது” என அன்னார் பதிலளித்தார்கள். (புகாரி3346, முஸ்லிம்:2880)

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ஒருதடவை: “ஒரு படையினர் கஃபாவின் மீது படையெடுப்பார்கள். வெட்ட வெளியான ஒரு பூமியில் அவர்கள் இருக்கும் போது அவர்களில் முதலாமவர் முதல் கடைசி நபர்வரை உயிருடன் பூமிக்குள் புதையுண்டு போவார்கள்!” என்று கூறினார்கள். இதனைக் கேட்ட ஆயிஷா(ரழி): ‘இறைத் தூதர் அவர்களே! அவர்களில் முதலாமவர் முதல் கடைசி நபர் வரை எவ்வாறு புதையுண்டு போவார்கள்? அங்கே அவர்களைச் சேராதவர்களும் இருப்பார்கள். கடைவீதிகளும் இருக்குமே!’ எனக் கேட்டார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள் ‘அவர்களில் முதலாமவர் முதல் கடைசி நபர் வரை புதையுண்டு போகத்தான் செய்வார்கள் எனினும் (அதற்குப்) பின்னர் அவரவரின் எண்ணத்திற்கேற்ப எழுப்பப்படுவார்கள்!’ என்றார்கள். (புகாரி: 2118)

எனவே, கெட்டவர்களுக்கு இறங்கும் தண்டனை அவர்களுக்கு அருகில் இருக்கும் நல்லவர்களுக்கும் சேர்ந்து இறங்கும் என்ற கருத்தை நபி(ஸல்) இங்கு குறிப்பிடுவதுடன் மறுமையில் மாத்திரம் கேள்வி கணக்கின் போது எண்ணம் பார்க்கப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

11. தௌபாவும் பிறஅமல்களும் இந்த சம்பவங்களைக் காணும் ஒவ்வொருவரும் இனிமேல் இது போன்ற நிகழ்வுகளை ஏற்படுத்தாமலிருக்கும் அல்லாஹ்விடம் படிபணிவுடன் வேண்டுதல் செய்யவும் அவன்பால் முழுமையாக திரும்புவதற்கும் பாவங்களை முற்றிலும் கைவிட்டு தாமதமின்றி தவ்பா (பச்சாதாபம்) செய்து, இஸ்திக்ஃபார் (மன்னிப்பு வேண்டுதல்) செய்யவும் முயற்சி யெடுக்க வேண்டும். இவ்வாறான எச்சரிக்கைச் சம்பவங்களைப் பார்ப்போர் ஏன் தௌபா செய்யாமல் இருக்கிறார்கள் என்று அல்லாஹ் கேட்கிறான். “எமது தண்டனை அவர்களிடம் வந்தபோது அவர்கள் ஏன் பணிவுடன் வேண்டவில்லை?” (அல்அன்ஆம் : 43) “அவர்கள் மன்னிப்புக் கோரி கொண்டிருக்கும் போது அல்லாஹ் அவர்களைத் தண்டிப்பவன் அல்ல.” (அல்-அன்ஃபால் : 33)

அதேபோல் தொழுகையை நிறைவேற்றுவதும், துஆவின் மூலம் அல்லாஹ்விடம் தொடர்ச்சியாகவும் உறுதியுடனும் வேண்டிக் கொள்வதும், திக்ர் ஸதகா வழங்குதல் மற்றும் அல்லாஹ்வின் தண்டனை மற்றும் கோபத்தைக் தவிர்ப்பதற்கான பிற காரியங்களை மேற்கொள்வது, ஸலாதுல் ஆயாத்’,’குனூதுன் நவாஸில்’, என்பவற்றில் ஈடுபடுவதும் பாதிக்கப்பட்டவர்களுடன் பேசும் போது துஆக்கள் செய்வதும் அவசியமாகும்.

12. பாதிகப்படாதவர்களுக்கு சோதனை

இந்த அனர்த்தங்கள் நிகழ்ந்து இழப்புக்களை மக்கள் சந்திக்கும் போது அவற்றால் பாதிக்கப்படாத வர்களுக்கு அது ஒரு சோதனையாக அமையும். அதாவது, அவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுகிறார்களா? என அல்லாஹ் அவர்களை சோதிக்கிறான். இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகவும் கஷ்டம் துன்பங்களில் சிக்கியிருப்போருக்கு கைகொடுப் பதற்கும் தமது செலவங்களில் இருந்து உதவி செய்யாமல் சுயநலமிகளாக தமது சொத்துக்களைப் பதுக்கி வைப்பவர்களுக்கு கடும் தண்டனை உள்ளதாக அல்லாஹ் பின்வருமாறு எச்சரிக்கிறான்:- “இன்னும் எவர்கள் பொன்னையும், வெள்ளியையும் சேமித்து வைத்துக் கொண்டு அவற்றை அல்லாஹ்வின் பாதையில் செலவிடாதிருக்கின்றார் களோ் (நபியே!) அவர்களுக்கு நோவினை செய்யும் வேதனை உண்டு என்று நன்மாராயம் கூறுவீராக!”. (9:34)

“அறிந்துகொள்க! அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யுமாறு அழைக்கப்படும் கூட்டத்தினர் நீங்கள், ஆனால் உங்களில் கஞ்சத்தனம் உடையோரும் இருக்கிறார்கள் ஆனால், எவன் கஞ்சத்தனம் செய்கிறானோ, அவன் தன் ஆத்மாவுக்கே கஞ்சத்தனம் செய்கிறான் - அல்லாஹ் எவ்விதத் தேவையுமற்றவன்- நீங்கள் தேவையுடையவர்களாக இருக்கின்றீர்கள். எனவே (சத்தியத்தை) நீங்கள் புறக்கணிப்பீர் களாயின், உங்களல்லாத (வேறு ஒரு) சமூகத்தாரை அவன் பதிலாகக் கொண்டு வருவான் பின்னர், உங்களைப் போன்று அவர்கள் இருக்கமாட்டார்கள். (47:38)

மாறாக, தேவையுடையோருக்கு தமது உடலால் சொத்துக்களால் உதவி செய்து இல்லிடங்களை இழந்திருப்போருக்கு அடைக்கலம் கொடுத்தவர்களை அல்லாஹ் பின்வருமாறு புகழுகிறான்:- “நிச்சயமாக எவர் ஈமான் கொண்டு, தம் ஊரைவிட்டு வெளியேறி, தம் செல்வங்களையும், உயிர்களையும் அல்லாஹ்வின் பாதையில் தியாகம் செய்தார்களோ, அவர்களும் எவர் இத்தகையோருக்குப் புகலிடம் கொடுத்து உதவியும் செய்தார்களோ, அவர்களும் ஒருவருக்கொருவர் உற்ற நண்பர்கள் ஆவார்கள்” (8:72)

(அடுத்த வாரம் தொடரும்...)

# பல்கலைக்கழக சட்ட விதிமுறைகளை பின்பற்றுவது, பிறரை மதிப்பது, வன்முறை மற்றும் தவறான நடத்தைகளை தவிர்ப்பது மாணவர்களின் கடமை :

## தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர்

**(நூருல் ஹுதா உமர்)**

2026 ஆம் ஆண்டின் முதல் நாளிலேயே மாணவர்கள் தங்களின் பல்கலைக்கழக வாழ்வை ஆரம்பிப்பது ஒரு சிறப்பான தருணம். புதிய ஆண்டு என்பது புதிய நம்பிக்கைகள், புதிய பொறுப்புகள் மற்றும் புதிய தொடக்கங்களைக் குறிக்கும். இந்த நாளிலிருந்து மாணவர்களின் வாழ்க்கையில் ஒரு முக்கிய அத்தியாயம் ஆரம்பமாகின்றது என இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி எஸ்.எம். ஜுனைடீன் தெரிவித்தார்.
முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடத்தின் புதிய மாணவர்கள் இணைந்து கொள்ளும் ஆரம்ப நிகழ்வு (01) பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள ஏ.ஆர். மன்சூர் ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது, நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு புதிய மாணவர்களை நோக்கி சிறப்புரையாற்றிய உபவேந்தர் தனது உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
தொடர்ந்தும் உரையாற்றிய அவர், தேசிய பல்கலைக்கழக கட்டமைப்புக்குள் இடம்பெறுவது ஒரு அரிய வாய்ப்பு, இது மிகக் குறைந்த திறமையான மாணவர்களுக்கே கிடைக்கும் சிறப்பு சந்தர்ப்பம். எனவே, இந்த வாய்ப்பை பொறுப்புடனும் புத்திசாலித்தனமாக வும் பயன்படுத்த வேண்டும்.
பல்கலைக்கழக வாழ்க்கையில் கல்விசார் சவால்கள், மொழிசார் சிரமங்கள், பொருளாதார சிக்கல்கள், விடுதி மற்றும் புதிய சூழலுக்கு பழகுதல் போன்ற பல்வேறு சவால்கள் இருக்கலாம். இருப்பினும், இவை அனைத்தையும் எதிர்கால வாழ்க்கைக்கான பயிற்சியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.
பல்கலைக்கழகத்தில் நீங்கள் கற்கும் அனைத்தும் நேரடியாக தொழிலில் பயன்படாவிட்டாலும், ஒழுக்கம், மனப்பாங்கு, சிந்தனை முறை, பிரச்சினைகளை தீர்க்கும் திறன் போன்றவை உங்கள் முழு வாழ்க்கைக்கும் வழிகாட்டும்.
பாடசாலை வாழ்க்கையை விட பல்கலைக்கழக வாழ்க்கை முற்றிலும் வேறுபட்டது. இங்கு கிடைக்கும் சுதந்திரம் பொறுப்புடன் இணைந்திருக்க வேண்டும். பாடவகுப்புகளில் தவறாமல் பங்கேற்பது, பல்கலைக்கழக சட்ட விதிமுறைகளைப் பின்பற்றுவது, பிறரை மதிப்பது, வன்முறை மற்றும் தவறான நடத்தைகளை தவிர்ப்பது மாணவர்களின் கடமை.
மேலும், தென்கிழக்கு பல்கலைக்கழகம் இலங்கையின் அனைத்து சமூகங்களையும் சமமாக பிரதிநிதித் துவப்படுத்தும் தேசிய பல்கலைக்கழகம். இந்த பன்முகச் சூழலை திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ளுமாறு மாணவர்களை ஊக்குவித்தார்.
பகடிவதை என்பது இலங்கை சட்டத்தின் கீழ் கடுமையான குற்றமாகும். பல துயர சம்பவங்கள் நீதிமன்றம் வரை சென்றுள்ளதை நினைவூட்டுகிறேன். இதனைத் தடுக்கும் நோக்கில் பல்கலைக்கழக மாணவர் ஒழுக்க விதிமுறைகள் அமுலில் உள்ளதாகவும், அவை பல்கலைக்கழக இணையதளத்தில்



வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.
மேலும், மாணவர்களின் மனநலத்தை பாதுகாக்க ஹெல்ப்லைன் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது, அதன் விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும். பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் மாணவர்களுடன் தொடர்ச்சியான தொடர்பை பேணுமாறும், அவர்களின் மன அழுத்தம் மற்றும் நடத்தை மாற்றங்களை கவனிக்குமாறும் கேட்டுக் கொண்டதுடன் ஏதேனும் பிரச்சினைகள் தோன்றும் போது பல்கலைக்கழக அதிகாரிகளை அணுக ஊக்குவிக்க வேண்டும்.
இதுவரை தென்கிழக்கு பல்கலைக்கழகம் 16,000 க்கும் மேற்பட்ட பட்டதாரிகளை உருவாக்கியுள்ளதாகவும், முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடம் மட்டும் சுமார் 5,000 பட்டதாரிகளையும் நூற்றுக்கு மேற்பட்ட பட்டமேற்படிப்பு பட்டதாரிகளையும் உருவாக்கியுள்ள தாகவும் தெரிவித்த அவர் இவர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அரச மற்றும் தனியார் துறைகளில் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர் என்றார். பல்கலைக்கழகத்தில் கல்வி, விளையாட்டு மற்றும் அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், விடுதி வசதி இன்னும் சவாலாக உள்ளதாகவும், இதற்கான முன்மொழிவுகள் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் உபவேந்தர் தெரிவித்தார். இந்த காலகட்டத்தில் மாணவர்களின் பொறுமையும் ஒத்துழைப்பும் அவசியம் எனக் கேட்டுக் கொண்டார்.

# இஹலபுளியங்குளம் அந்நஹ்லாவில் பல்வேறு நிகழ்வுகள்







**(எம்.ரீ. ஆரிப் )**

அனுராதபுரம் இஹலப்புளியங்குளம் அந்நஹ்லா அஹதிய்யா பாடசாலை யின் 2026 ம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் நிகழ்வும், அஹதியா தேசிய இடைநிலை சான்றிதழ்ப் பரீட்சை 2024 (2025) சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும், அந்நஹ்லா அஹதிய்யா பாடசாலையின் அதிபர் தேசமான்ய எம்.ஆர்.எம்.ரனீஸ் மற்றும் தேசமான்ய பீ.ஜாயிஸ் (உஸ்வி) ஆகியோரின் தலைமையில் அந்நஹ்லா கல்வி மத்திய நிலையத்தில் (11) நடைபெற்றது.
இதன் போது பாடசாலையின் சகல மாணவர்களுக்கும் ஹக்மன் பவுண்டேஷன் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு, 2025 ஆம் ஆண்டின் இறுதித் தவணையில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கு பெறு பேற்றறிக்கைகள் விழாவின் போது வழங்கி வைக்கப்பட்டன.
அத்தோடு அஹதிய்யா பாடசாலைக்கு தொடர்ச்சியாக சமுகமளித்த மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு







**(உக்குவளை நிருபர்)**

உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை க்கான நுளைவாயில் முகப்புடன் கூடிய சுற்றுமதில் கட்டுமானப் பணிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு (17) பாடசாலை அதிபர் எச்.எம். சாதாத் தலைமையில் நடைபெற்றது.
சகோதரர்களான அர்க்கம் அலி, அஸ்கர் அலி ஆகியோர் இணைந்த குடும்பத்தார் காலஞ்சென்ற தமது தந்தை பரகஹவெல அக்றம் என்பவரது நினைவாக சுமார் 26 இலட்சம் நிதிசெலவில் இப்பணி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இந்நிகழ்வில் இப்பாடசாலை பழைய மற்றும் அபிவிருத்தி சங்க உறுப்பினர் களுடன் ஆசிரியர் ஆசிரியைகள் நலன்விரும்பிகள் முன்னாள் அதிபர்கள் உக்குவளை பிரதேச சபை தலைவர் நிமல் கருனாதிலக்க உதவித் தலைவர் எம். ராபி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நுகர்வோர் வர்த்தக செயலமர்வு





**(மாவனல்லை நிருபர்)**

மனித உரிமைக்கான ஏ.எஸ்.ஏ.டி. பவுன்டேஷன் மூலம் நுகர்வோர் மற்றும் வர்த்தக சங்க தொழிற்சங்க உறுப்பினர்களுக்கான கேகாலை மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி செயலமர்வு மாவனல்லை சீதா உணவக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.
“பாதுகாப்பான உணவை கோருவதற்காக சமூகத்தை வலுவூட்டுதல் “என்ற தொனிப் பொருளில் ஞருரேகு நிருவனம் மூலம் இதன் கேகாலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கலாநிதி எம் .எஸ். எம். ஸாதிக் தலைமையில் இவ் நிகழ்வு நடைபெற்றது.
இதன் பயிற்றுவிப்பாளராக ஆர். டி.எச்.எஸ்.துறை சார்ந்த கல்வி அதிகாரி ஐ. எஸ். ராஜபக்க்ஷ மற்றும் கேகாலை மாவட்ட நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரி ஈ. எம். பி.எச். ஏகநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.
மாவனல்லை வர்த்தகர் சங்க தலைவர் கே.எம் அமீனுல்லா, பிரதேச சபை உறுப்பினர் அன்ஷ ாப் நஸீர், மனித உரிமைகான ஆஸ த் அமைப்பின் செயலாளர்களான நஸ்ரினா மற்றும் எம். ஆர். எம் மூஸீன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர் .

# வருடாந்த புனித மிஃராஜ் மஜ்லிஸ்



**(பீ.எம்.முக்தார்)**

பேருவலை சீனன்கோட்டை நவ்பல் ஜாபிர் மாவத்த (கட்டுக்குருந்தை) இப்றாஹிமிய்யா ஸாவியாவின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடைபெற்று வரும் புனித மிஃராஜ் தின மஜ்லிஸ் கடந்த சனிக்கிழமை (17) நடைபெற்றது.
அஸர் தொழுகையை தொடர்ந்து புனித சுப்ஹான மவ்லிதும், மஃரிப் தொழுகையை தொடர்ந்து வலீபா, யாகூதிய்யா, ஹரீரி மவ்லிதும் ஓதப்பட்டதோடு, இஷா தொழுகையை தொடர்ந்து ஹழராவும் நடைபெற்றது.
அதனைத் தொடர்ந்து மௌலவி சி.ஐ.எம் அஸ்மீர் (ஹஸனி) விஷேட மிஃராஜ் சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்தினார்.




அரபாத் பஹுர்தீன்

# ரி20 உலகக் கிண்ணம்

## பங்களாதேஷா? ஸ்கொட்லாந்தா?

## இறுதி முடிவு இன்று

2026 ஐசிசி ரி20 உலகக் கிண்ண தொடரில் பங்களாதேஷ் பங்கேற்பதா இல்லையா என்பதற்கான இறுதி முடிவை ஜனவரி 21 இன்றுக்குள் ஐசிசி எடுக்க உள்ளது. இதற்காக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை (BCB) உடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த போட்டித் தொடர் இந்தியாவில் மற்றும் இலங்கையில் நடைபெற உள்ள நிலையில் பங்களாதேஷ் அணி பங்கேற்கும் போட்டிகள் அனைத்தும் இந்தியாவில் இடம்பெற உள்ளதால், இரு நாட்டுக்கும் இடையில் தற்சமயம் ஏற்பட்டுள்ள முறுகல் நிலைமையால் பங்களாதேஷ் அணி இந்தியாவுக்கு பயணம் செய்யுமா இல்லையா என்பது குறித்து ஒரு முடிவு அவசியம் என ஐசிசி, BCB-க்கு தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ் அணி இந்தியாவுக்கு அனுப்பப்படாது என்று BCB முடிவு செய்தால், அந்த அணிக்கு பதிலாக வேறொரு அணியை ஐசிசி அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய ஐசிசி தரவரிசைப்படி, ஸ்காட்லாந்து அணி மாற்று அணியாக தேர்வு செய்யப்பட வாய்ப்புள்ளது.

இந்த விவகாரம் தற்போது விவாத நிலையில் தொடர்கிறது.

ஜனவரி 21ஆம் திகதி இன்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் இறுதி நிலைப்பாட்டை ஐசிசி எதிர்பார்த்து காத்திருக்கிறது.

# அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் ஜெக்கோவிச்சுக்கு இலகு வெற்றி



உலகப் புகழ் பெற்ற கிரான்ஸ்லாம் டென்னிஸ் தொடர்களில் ஒன்றாக அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் நடசத்திர வீரர்களான ஜெக்கோவிச் மற்றும் சிட்சிபாஸ் ஆகியோர் இலகு வெற்றிகளைப் பதிவு செய்து 2ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

2026ஆம் ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான ஆஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் தொடர் கடந்த 18ஆம் திகதி மெல்போர்ன் நகரில் ஆரம்பித்திருந்தது. இப்போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 1ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

அதற்கமைய நேற்று (20) இடம்பெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று போட்டி ஒன்றில் முன்னால் முதல்தர வீரரும், 10 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்ற வருமான சேர்பியாவின் ஜெக்கோவிச் ஸ்பெய்னின் மார்டினஸ்ஸை எதிர்கொண்டு விளையாடினார்.

இப்போட்டியில் தனது அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜெக்கோவிச் முதல் 3 செட்களையும் 6:3, 6:2 மற்றும் 6:2 என்ற நேர் செட்களில் வீழ்த்தி வெற்றி பெற்று 2ஆம் சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

மேலும் அப்போட்டியைத் தொடர்ந்து இடம்பெற்ற மற்றுமொரு முதல் சுற்றுப் போட்டியில் முன்னால் முன்னிலை வீரரான சிட்சிபாஸ் ஜப்பான் வீரரான மொசக்யூட்டை எதிர்த்து விளையாடி 3:6, 6:2, 6:2 மற்றும் 6:2 என்ற செட் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# வெள்ளைப் பந்து தொடரில் பங்கேற்க இலங்கை வந்தது இங்கிலாந்து




இங்கிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் (ODI) மற்றும் 3 போட்டிகள் கொண்ட ரி20 (வு20ஐ) தொடர்களில் பங்கேற்க நேற்று முன்தினம் (19) காலை இலங்கை வந்தடைந்தது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான தொடரில் முதலில் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் இடம்பெறவுள்ளது. இப் போட்டிகள் ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பகலிரவுப் போட்டிகளாக இடம்பெறவுள்ளது. இதன் முதல் போட்டி நாளை 22 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மேலும் 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடர் பல்லேகல சர்வதேச மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இத் தொடரில் பங்கேற்கவுள்ள இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் (19) இலங்கை வந்தடைந்தது அவ் அணிக்கு இன்று பலத்த வரவேற்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஆபிரிக்க சம்பியன் கிண்ணத்தை உச்சி முகர்ந்தது செனகல்

மொரோக்கோவுக்கு எதிரான இறுதிப் போட்டியில் பெரும் சர்ச்சைக்குப் பின்னர் மேலதிக நேரத்தில் கோல் புகுத்தி செனகல் இரண்டாவது முறையாக ஆபிரிக்க கிண்ணத்தை வென்றது.

24 அணிகளுடன் மொரோக்கோவில் நடைபெற்ற ஆபிரிக்க கிண்ண கால்பந்து தொடரின் (அப்கொன்) இறுதிப் போட்டி கடந்த (18ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் போட்டியின் முழு நேரத்தில் இரு அணிகளும் கோல் புகுத்த தவறியது.

எனினும் போட்டியின் முழு நேரம் முடியும் தருணத்தில் மொரோக்கோ அணிக்கு வழங்கிய பெனால்டி வாய்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து செனகல் வீரர்கள் மைதானத்தை விட்டு வெளியேறினர்.

இதனால் பெரும் பதற்றம் ஏற்பட்டதோடு அரங்கில் இருந்த செனகல் ரசிகர்களும் குழப்பத்தை விளைவித்தனர். 17 நிமிடங்கள் தாமதத்தின் பின்னர் செனகல் வீரர்கள் மீண்டும் மைதானம் திரும்பியதை அடுத்து மொரோக்கோ அணிக்கு பெனால்டி வாய்ப்பு வழக்கப்பட்டபோதும் அந்த பெனால்டியை செனகல் கோல் காப்பாளர் தடுத்தார்.

இதனால் மேலதிக நேரத்துக்குச் சென்ற போட்டியின் நான்காவது நிமிடத்தில் பபே குவாயே கோல் புகுத்தி செனகலின் வெற்றியை உறுதி செய்தார்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.